# PAPER I, II, III – CURRENT AFFAIRS (INDIA) TEST (17.10.2021)
# PART I & II

**1. PM – USA Visit**
**பிரதமரின் சமீபத்திய அமெரிக்க பயணம்**

## பிரதமர் மோடியின் அமெரிக்கப் பயணத்தின் முக்கியத்துவம்

பிரதமர் நரேந்திர மோடியின் வாஷிங்டன் பயணம் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடனுடனான அவரது தனிப்பட்ட சந்திப்பு வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வாகிறது. உலகின் மிகப் பெரிய ஜனநாயகம், ''அனைத்து ஜனநாயக நாடுகளின தாய்'' என்ற பெருமைக்குரிய இந்தியா மற்றும் வளர்ந்து வரும் சக்தியும் உலகின் மிகப் பழமையான ஜனநாயகமும் கொண்ட, ஆளும் பொருளாதாரம் மற்றும் இராணுவ வல்லரசு நாடான அமெரிக்கா இடையே பரஸ்பர நட்புறவை வலுப்படுத்தும் மூலோபாய கூட்டாண்மையை உருவாக்குவதற்கான பிரதமர் மோடியின் ஏடு ஆண்டுகால நோக்கம் வெற்றிகரமாக நிறைவேறியது. அமெரிக்கா மற்றும் இந்தியா இருதரப்பு உறவை வலுப்படுத்துவதற்காக அமெரிக்க ஜனாதிபதிகளின் நம்பிக்கையை வெல்வதில் , பராக் ஒபாமா மற்றும் டொனால்ட் டிரம்ப் முதல் இப்போது பைடன் வரை பிரதமர் மோடி தனது திறமையை நிரூபித்துள்ளார்.

''மோ-ஜோ'' அணைப்பு உட்பட பைடனுடனான பிரதமர் மோடியின் இந்த அசாதாரண அன்பு நிமித்தமான சந்திப்பானது இருதரப்பு அன்பை அதிகரிப்பதாக உள்ளது. அதற்கு முன்னதாக ஒரு குறிப்பிடத்தக ''இணைப்பு'' மற்றும் துணை ஜனாதிபதி கமலா ஹாரிசுடனான சந்திப்பை நிகழ்த்தினார் பிரதமர் மோடி இதில் இவர் அமெரிக்கா மற்றும் இந்தியாவை ''இயற்கை பங்காளர்கள்'' என்று குறிப்பிட்டார். கமலா ஹாரிஸ் சுய மோட்டோவில், பாகிஸ்தான் தனது நாட்டில் உள்ள பயங்கரவாதக் குழுக்களுக்கு ஆதரவளிப்பது குறித்து கவலை தெரிவித்தார் மேலும் இந்தியா மற்றும் அமெரிக்காவின் பாதுகாப்பை அச்சுறுத்தாதவாறு இந்தக் குழுக்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு இஸ்லாமாபாத்திடம் கேட்டுக்கொண்டார்.

இரு தரப்பினரும் இருதரப்பு, பிராந்திய மற்றும் உலகளாவிய வகையில் அனைத்து நிலைகளிலுமான ''மைல்கல்'', ''ஒரு புதிய அத்தியாயத்தின் துவக்கம்'', ''முதன்மையானவை'' மேலும் '' அரசியல் விருப்பம் மற்றும் உள்நோக்கங்கள் பற்றிய செயல்விளக்கம்'' என பல முடிவுகளை விவரித்தார்கள். எதிர்காலம் சார்ந்த மற்றும் மாற்றம் உருவாக்கக் கூடிய இந்திய-அமெரிக்க மூலோபாய கூட்டாண்மைக்காக மேற்கண்ட வழிமுறையை அவர்கள் அமைத்தார்கள்.

கூட்டாண்மை அறிக்கையில் அறிவித்துள்ளது போல், இந்த கூட்டாண்மை நிலையான வளர்ச்சி, அமைதி, பாதுகாப்பு மற்றும் ஜனநாயகம் என அனைத்தில் உலகளாவிய நன்மைக்கான ஒரு சக்தியாக இருக்கும். இதன் முடிவுகளானது 2030 க்குள் வளர்ந்த, சிறந்த சக்தியாக மாறும் இந்தியாவின் எதிர்காலத்தை உணர்ந்து கொள்வதற்கான முக்கியமான பகுதிகளை உள்ளடக்கிய ஒரு வலுவான பார்வை மற்றும் நடைமுறை நடவடிக்கைகளின் கலவையை உள்ளடக்கியது.

குறிப்பிடத்தக்க வகையில், இந்தியாவும் அமெரிக்காவும் தங்களை முன்மாதிரிகளாகக் காட்டி அவர்களின் சிறப்புப் பிணைப்பைக் கொண்டாடின, மேலும் ஜனநாயகம், உலகளாவிய மனித உரிமைகள், சகிப்புத்தன்மை மற்றும் பன்முகத்தன்மை ஆகியவற்றின் பகிரப்பட்ட மதிப்புகளை மற்ற நாடுகளும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஊக்குவித்தன. இதன் நீட்டிப்பாக குவார்ட், ஜனநாயகத்தின் “ தடுப்பு அரண்” ஆனது, பயங்கரவாத சக்திகள், காலநிலை நெருக்கடி, சைபர் தாக்குதல்கள், பிராந்திய ஒருமைப்பாடு, இறையாண்மை மற்றும் சர்வதேச சட்டங்களை மறைமுகமாக எதிர்கொண்டன.

இந்திய-அமெரிக்க மூலோபாய கூட்டாண்மையின் ஐந்து உந்து சக்திகளான பாரம்பரியம், தொழில்நுட்பம், வர்த்தகம், நம்பிக்கைத் தன்மை மற்றும் திறமை ஆகியன இந்திய-அமெரிக்க சமூகத்தின் தொப்புள் கொடியாக அடையாளம் காணப்பட்டது. நிலம் மீட்டலில் ஒரு குறிப்பிடத்தக்க லாபத்தை ஈட்டுவதில் இந்தப் பயணம் முக்கியமானது. முன்னதாக ட்ரம்ப்-மோடியின் நட்புறவோடு காஷ்மீர் பற்றிய பைடன்- ஹாரிஸ் பிரச்சார அறிவிப்புகள் மற்றும் 370வது அமர்வு தொடர்பாக இரு நாட்டு இடதுசாரிகள் மற்றும் பாகிஸ்தான் ஆதரவாளர்களால் சொல்லப்பட்ட தவறான மனித உரிமை கதைகள் ஆகியவை கவலையை ஏற்படுத்தியிருந்தது.

கோவிட் -19 தொற்றுநோய்க்கு எதிரான போரை திறம்பட நடத்தியதுடன், காஷ்மீரில் பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாத தாக்குதல்களையும், லடாக்கில் சீன ஆக்கிரமிப்புகளையும் தடுத்ததால், இந்தப் பயணமானது இந்தியாவிற்கு பெரும் ஆபத்தையும் ஏற்படுத்தி இருக்கிறது. இந்தப் பயணத்திற்கு முன்னதாக ஆப்கானிஸ்தானை தாலிபான் கைப்பற்றியது இந்தியாவின் பாதுகாப்பிற்கு புதிய அச்சுறுத்தல்களை ஏற்படுத்தியுள்ளதோடு பிராந்தியத்திற்கான அமெரிக்காவின் அர்ப்பணிப்பு, பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் ஜனநாயகம் பற்றி கேள்வியெழுப்புவதாக உள்ளது.

எனவே, பிரதமர் மோடியின் பயணம், இந்திய-அமெரிக்க உறவுகளை ஒரு புதிய பாதையில் கொண்டு செல்வதில் சிறப்புக் கவனம் செலுத்துகிறது. கோவிட்-19 ற்குப் பிந்தைய மீட்பிற்காக 5 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை உருவாக்கும் முயற்சிக்கு வழிவகுப்பதோடு, வேகமாக வளர்ந்து வரும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு பதிலளிப்பதற்கும் இந்தப் பயணம் சிறப்பாகக் கருதப்படுகிறது. கூட்டு அறிக்கையானது அரசு, கல்வித்துறை, பெருநிறுவனம் உலகம் ஆகியவற்றிற்கும் இருநாட்டு மக்கள் அத்தோடு அண்டை நாட்டு மக்களுக்கும் மேலும் பெரிய சர்வதேச சமூகத்திற்கும் ஒரு நீடித்த இந்திய-அமெரிக்க கூட்டுவாழ்வைக் குறிக்கிறது.

“அமெரிக்க-இந்திய பாதுகாப்பு உறவின் வலிமை”, “ஒரு முக்கிய பாதுகாப்பு பங்காளராக இந்தியாவுக்கு அதன் மாறாத அர்ப்பணிப்பு”, அதன் இராணுவ மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு, இணை உற்பத்தி மற்றும் இணை வளர்ச்சி ஆகியவற்றை அமெரிக்கா மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

பயங்கரவாதத்திற்கு எதிரான, அனைத்து செயல்களையும் சுட்டிக்காட்டி, மும்பை பயங்கரவாத தாக்குதல் மற்றும் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் நாடுகள் உட்பட,

‘‘அனைத்து பயங்கரவாத குழுக்களுக்கு எதிராக ஒருங்கிணைந்த நடவடிக்கை’’ செய்ய ‘‘உலகளாவிய மற்றும் எல்லை தாண்டிய பயங்கரவாதத்திற்கு எதிரான பகிரப்பட்ட போராட்டத்தில் இந்தியாவுடன் இணைந்து நிற்க’’ அமெரிக்கா உறுதியளித்தது. உளவுத்துறை பகிர்வு, சட்ட அமலாக்கம் மற்றும் இணைய பாதுகாப்பு ஒத்துழைப்பு ஆகிய உறுதிமொழிகள் எடுக்கப்பட்டன.

ஆப்கானிஸ்தான் பிரதேசத்தை, எந்த நாட்டையும் அச்சுறுத்தவோ அல்லது தாக்கவோ, பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுக்கவோ அல்லது பயிற்சி அளிக்கவோ, பயங்கரவாத தாக்குதல்களுக்கு திட்டமிடவோ அல்லது அவர்களுக்கு நிதியளிக்கவோ பயன்படுத்தக்கூடாது என்று இரு நாடுகளும் கோரிக்கை வைத்தன. தாலிபான்கள் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சில் தீர்மானத்தின் UNSC 2593 கட்டளைகளுக்கு இணங்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது.

ஐஎன்எஸ்சி தலைவராக இருந்த காலத்தில் இந்தியாவின் வலுவான தலைமையை பைடன் பாராட்டினார் மேலும் சீர்திருத்தப்பட்ட யுஎன்எஸ்சியில் நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து மற்றும் அணுசக்தி வழங்குநர்கள் குழுவில் இந்தியாவின் உள்நுழைவையும் ஆதரித்தார். மோடியும் பைடனும் ‘‘வர்த்தக உறவின் எதிர்காலத்திற்கான பகிரப்பட்ட லட்சியப் பார்வையை’’ உருவாக்குவதாக உறுதியளித்தனர், முதலீட்டு ஒப்பந்தத்தில் பேச்சுவார்த்தைகளை புதுப்பித்து, நெகிழ்ச்சியான மற்றும் பாதுகாப்பான இந்திய-அமெரிக்க விநியோகச் சங்கிலிகளை உருவாக்கினர்.

இந்திய-அமெரிக்க உயர் தொழில்நுட்பக் கூட்டுறவுக் குழுவானது, ‘‘முக்கியமான மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களான விண்வெளி, சைபர், சுகாதாரப் பாதுகாப்பு, குறைக் கடத்திகள், AI (செயற்கை நுண்ணறிவு), 5 G 6 G மற்றும் எதிர்கால தலைமுறை தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் பிளாக்செயின் ஆகியவை அடுத்த தலைமுறைக்கான புதுமையான பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பான நிலப்பரப்பு ஆகியவற்றை வரையறுக்கின்றன. விண்வெளி தொடர்பான ஒப்பந்தம் இறுதி செய்யப்பட உள்ளது.

பைடனின் தலைமையிலான காலநிலை நடவடிக்கை, பிரதமர் மோடியின் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் இலக்கு நிர்ணயம் ஆகியவற்றில் இருநாட்டிற்கும் பரஸ்பர ஆதரவு உள்ளது. உலகளாவிய எரிசக்தி அணுகலுக்கான நிதி திரட்டுதல் மற்றும் ‘‘ இந்திய-அமெரிக்க காலநிலை மற்றும் தூய ஆற்றல் நிகழ்ச்சி நிரல் 2030 கூட்டாண்மை’’ கீழ் முக்கியமான தொழில் நுட்பங்களை வரிசைப்படுத்துதல் ஆகியவை முன்னிலைப்படுத்தப்பட்டன.

## 2. POSHAN Abhiyan
## POSHAN திட்டம்

***ஊட்டச்சத்திற்கான மத்திய அரசின் திட்டமான ‘போஷன் அபியான்’ திட்டத்தில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது.***

நாட்டிலிருக்கும் குழந்தைகள், பெண்கள் ஆகியவர்களின் ஊட்டச்சத்தை அதிகரிக்க மத்திய அரசு ‘போஷன் அபியான்’ என்ற திட்டத்தை கொண்டு வந்தது. இந்தத் திட்டத்தின் மூலம்

மாநில மக்களின் ஊட்டச்சத்தை அதிகரிக்க பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் சிறப்பாக செயல்பட்ட மாநிலமாக தமிழ்நாடு முதலிடத்தை பெற்றுள்ளது.

இது தொடர்பாக மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகம் வெளியிட்டுள்ள குறிப்பில் இந்தத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திய மாநிலமாக தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. அத்துடன் இதனை மக்களிடம் கொண்டு சேர்த்தது மற்றும் சிறப்பான பயிற்சி வழங்கிய பிரிவிலும் தமிழ்நாடு முதலிடம் பிடித்துள்ளது. மேலும் ஒன்று இணைந்த குழந்தை வளர்ச்சி சேவைகளில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தை பிடித்துள்ளது.

இதற்கு தமிழ்நாட்டிற்கு பரிசுத் தொகையாக 3 கோடி ரூபாய் அளிக்கப்படவுள்ளது. இதனை வரும் வெள்ளிக்கிழமை டெல்லியில் நடைபெறும் விழாவில் மத்திய அரசு கொடுக்க உள்ளது.

கடந்த 2014ஆம் ஆண்டு முதல் முறையாக பதவியேற்றுக் கொண்ட மோடி தலைமையிலான பாஜக அரசு, பல்வேறு திட்டங்களை அறிமுகம் செய்தது. அந்த வகையில் 2017ல் ’போஷன் அபியான்’ என்ற திட்டத்தை கொண்டு வந்தது.

அதாவது ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத இந்தியாவை உருவாக்க, பல்வேறு அமைச்சகங்கள் ஒன்றிணைந்து இந்த திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இதன் நோக்கம் ஊட்டச்சத்து குறைபாடு உள்ள மாவட்டங்களை கண்டறிவது.

அங்கு அங்கன்வாடி சேவைகளை மேம்படுத்துவது. கர்ப்பிணி பெண்கள், தாய்மார்கள், குழந்தைகளுக்கு போதிய ஊட்டச்சத்து உணவுகளை அளித்து குறைபாடுகளை களைவது ஆகும்.

இந்நிலையில் மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவலின்படி, 'போஷன் அபியான்’ திட்டத்தின் மூலம் திறன் மேம்பாடு, ஒருங்கிணைப்பு, நடத்தை மாற்றம், சமூக அணி

 PH: 044-24339436, 42867555, 9840226187

திரட்டல், ஒட்டுமொத்தமாக சிறப்பான செயல்பாடு ஆகியவற்றில் தமிழ்நாடு அரசு சிறந்து விளங்குகிறது.

அதேசமயம் 'ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவை - பொது பயன்பாட்டு மென்பொருள்' அம்சத்தில் தமிழகம் இரண்டாம் இடத்தை பிடித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளது. இதன்மூலம் மொத்தம் 3 விருதுகளை தமிழக அரசு வென்றுள்ளது.

முதல்முறையாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள இந்த விருதுகளை, வரும் 23ஆம் தேதி டெல்லியில் மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி வெற்றி பெற்ற மாநிலங்கள்/ யூனியன் பிரதேசங்களுக்கு வழங்கி சிறப்பிக்க உள்ளார்.

மனித உடலில் உள்ள ரத்தத்தில் ஹீமோகுளோபின் குறைவாக உள்ளது அனிமீயா எனப்படும். இந்த பாதிப்பிலிருந்து பெண்கள் மற்றும் குழந்தைகளை பாதுகாக்க போசன் அபியான் என்ற திட்டத்தை கடந்த மார்ச் மாதம் மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் தொடங்கியது.

பெண்கள் மற்றும் குழந்தைகளை அனிமீயா பாதிப்பில் இருந்து பாதுகாப்பது ஆகும். மத்திய சுகாதாரத்துறை ஆய்வின் படி சென்னையில் 45 சதவீத பெண்களுக்கு அனிமீயா குறைபாடு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

எனவே வருடத்திற்கு 3 சதவீதம் குறைக்க வேண்டும். குறிப்பாக 15 வயது முதல் 45 வயது வரை உள்ள பெண்களை அனிமீயா பாதிப்பில் இருந்து பாதுகாக்க வேண்டும். அதற்கு அடுத்தபடியாக 5 வயதுவரையுள்ள குழந்தைகளுக்கு முறையான ஊட்டச் சத்து வழங்குவது வேண்டும்.

குறிப்பாக வயதிற்கு ஏற்ற எடை இல்லாமல் இருக்கும் குழந்தைகள் மற்றும் எடைக்கு ஏற்ற உயரம் இல்லால் இருக்கும் குழந்தைகளை கண்டறிந்து அவர்களுக்கு உரிய ஊட்டச் சத்து வழங்க வேண்டும். இது தொடர்பான விகிதத்தை ஒவ்வாரு வருடமும் 2 சதவீதம் குறைக்க வேண்டும்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள், கல்வித்துறை, சுகாதாரத்துறை, காவல் துறை, குடிநீர் வழங்கல் துறை மற்றும் குழந்தைகளுடன் தொடர்புடைய பல்வேறு துறைகளுடன் இணைந்து இதை செயல்படுத்த உள்ளது.

## 3. India's achievement in Para-Olympics
**மாற்றுத்திறனாளிகள் ஒலிம்பிக் போட்டியில் இந்தியர்களின் சாதனை**

## மாற்றுத்திறனாளிகளுக்கான ஒலிம்பிக்

**19 பதக்கங்களுடன் இந்தியா சாதனை**

டோக்கியோ பாராலிம்பிக் போட்டியில் 5 தங்கம் உள்பட 19 பதக்கங்கள் என்ற பிரம்மாண்ட சாதனையை இந்தியா படைத்தது.

இதுவரை நடைபெற்ற பாராலிம்பிக் போட்டியில் ஒட்டுமொத்தமாக 15 பதக்கங்களை மட்டுமே பெற்றிருந்தது. நிறைவு நாளான ஞாயிற்றுக்கிழமை பாட்மிண்டனில் ஜெய்ப்பூரைச் சேர்ந்த கிருஷ்ணா நாகர் தங்கப் பதக்கமும், தில்லி நொய்டாவைச் சேர்ந்த கஹாஸ் யதிராஜ் வெள்ளிப் பதக்கமும் வென்றனர்.

இந்திய அணி மொத்தம் 5 தங்கம், 8 வெள்ளி, 6 வெண்கலப் பதக்கங்களுடன் ஒட்டுமொத்தமாக 19 பதக்கங்களை கைப்பற்றி புதிய சாதனையுடன், பதக்கப் பட்டியலில் 24-ஆவது இடத்தைப் பெற்றது.

கரோனா பாதிப்பு காரணமாக ஒராண்டு தள்ளி வைக்கப்பட்ட நிலையில், கடந்த ஆக. 24-ஆம் தேதி டோக்கியோவில் பாராலிம்பிக் போட்டிகள் தொடங்கி 13 நாள்களாக நடைபெற்று வந்தன. இந்தியா சார்பில் மொத்தம் 54 பேர் கொண்ட அணியினர் கலந்து கொண்டனர்.

**பதக்க பட்டியல் :**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | சீனா | 96 | 60 | 51 | 207 |
| 2. | இங்கிலாந்து | 41 | 38 | 45 | 124 |
| 3. | அமெரிக்கா | 37 | 36 | 31 | 104 |
| 4. | ரஷியா | 36 | 33 | 49 | 118 |
| 5. | நெதர்லாந்து | 25 | 17 | 17 | 59 |
| 6. | உக்ரைன் | 24 | 47 | 27 | 98 |
| 7. | பிரேஸில் | 22 | 20 | 30 | 72 |
| 8. | ஆஸ்திரேலியா | 21 | 29 | 30 | 80 |
| 9. | இத்தாலி | 14 | 29 | 26 | 69 |
| 10. | அஜர்பைஜான் | 14 | 1 | 4 | 19 |
| 24 | இந்தியா | 5 | 8 | 6 | 19 |

**2024 பாரீஸில் பாராலிம்பிக்:**

வரும் 2024-ஆம் ஆண்டு பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் பாராலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ளன. பாராலிம்பிக் கொடியை ஐபிசி தலைவர் ஆன்ட்ரு பார்ஸன்ஸ் பாரீஸ் நகர மேயர் ஆனி ஹிடால்கோவிடம் வழங்கினார்.

**பதக்கம் வென்ற இந்திய அணியினர்:**

**தங்கம்:**
அவனி லெகரா (மகளிர் 10 மீ, ஏர் ரைபிள் எஸ்எச்1), பிரமோத் பகத் (பாட்மிண்டன் ஒற்றையர் எஸ்எல்3) கிருஷ்ணா நாகர் (பாட்மிண்டன் ஒற்றையர் எஸ்எச்6), சுமித் அன்டில் (தடகளம் ஈட்டி எறிதல் எஃப்64), மணிஷ்நர்வால் (கலப்பு 50 மீ, பிஸ்டல் எஸ்எச் 1).

**வெள்ளி:**

பவினாபென் படேல் (மகளிர் டென்னிஸ் கிளாஸ் 4), சிங்ராஜ் அதானா (கலப்பு 50 மீ), பிஸ்டல் எஸ் எச்1), யோகேஷ் கதுனியா (வட்டு எறிதல் எஃப்56), நிஷாத் குமார் (உயரம் தாண்டுதல் டி 47), மாரியப்பன் தங்கவேலு (உயரம் தாண்டுதல் டி63), பிரவீண்குமார் (உயரம் தாண்டுதல் டி64), தேவேந்திர ஜஜ்ஜாரியா (ஈட்டி எறிதல் எஃப்46), சுஹாஸ் யதிராஜ் (பாட்மிண்டன் ஒற்றையர், எஸ்எல்4)

**வெண்கலம்:**
அவனி லெகரா (50 மீ, ரைஃபிள்), ஹர்விந்தர் சிங் (வில் வித்தை ரெக்கர்வ்), சரத்குமார் (உயரம் தாண்டுதல் டி 63), சுந்தர் சிங்குர்ஜார் (ஈட்டி எறிதல் எஃப் 46), மனோஜ்சர்கார் (பாட்மிண்டன் ஒற்றையர், எஸ்எல் 3), சிங்ராஜ் அதானா (10 மீ, ஏர் பிஸ்டல் எஸ்எச் 1)

**சாதனைகள்:**
சுமித் அன்டில் (ஈட்டி எறிதல் உலக சாதனை), அவனி லெகரா (துப்பாக்கி சுடுதல்), உலக சாதனையுடன், பாராலிம்பிக் சாதனை), மணிஷ்நர்வால் (பாராலிம்பிக் சாதனை), நிஷாத் குமார் (உயரம் தாண்டுதல், ஆசிய சாதனை), பிரவீண்குமார் (உயரம் தாண்டுதல், ஆசிய சாதனை).

**பாராலிம்பிக் சாதனை:**

கடந்த ஆகஸ்ட் 24-ஆம் தேதி டோக்கியோவில் கோலாகலமாகத் தொடங்கி 13 நாள்கள் நடைபெற்ற பாராலிம்பிக் போட்டியின் பதக்கம் பட்டியலில் 24-ஆவது இடத்தை பெற்றிருக்கிறது இந்தியா. 1968 முதல் இதுவரை பாராலிம்பிக் போட்டியில் வென்ற மொத்தப் பதக்கங்களின் எண்ணிக்கையை விட இப்போதைய டோக்கியோ பாராலிம்பிக்கில் நமது மாற்றுத்திறனாளி வீரர்கள் வென்று குவித்த பதக்கங்களின் எண்ணிக்கை அதிகம். அதிலிருந்து இந்தியாவின் வெற்றி எத்தகையது என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

160 நாடுகளிலிருந்து டோக்கியோ பாராலிம்பிக் போட்டியில் 5,405 வீரர்கள் 24 விளையாட்டுகளில் பங்குபெற கூடினார்கள். இந்தியாவிலிருந்து இதுவரையில் இல்லாத அளவில் ஒன்பது போட்டிகளில் கலந்து கொள்ள 54 பேர் டோக்கியோ சென்றனர். நடந்து முடிந்த பாராலிம்பிக் உள்பட இதுவரை இந்தியா 9 தங்கம், 12 வெள்ளி, 10 வெண்கலம் என 31 பதக்கங்களை வென்றிருக்கிறது.

மாற்றுத்திறனாளிகளுக்கான பாராலிம்பிக் சர்வதேச போட்டி 1960-இல் முதன் முறையாக இத்தாலியின் தலைநகர் ரோமில் நடந்தது. இஸ்ரேலின் டெல் அவிவ் நகரில் 1968-இல் நடந்த பாராலிம் பிக் போட்டியில்தான் இந்தியா கலந்து கொண்டது. இந்தியாவிலிருந்து 10 வீரர்கள் கலந்து கொண்டார்கள் என்றாலும், முதல் முயற்சியில் பதக்கம் எதையும் வெல்ல முடியவில்லை.

அடுத்தாற்போல, 1972 ஹைடல்பர்க் போட்டியில்தான் முதன் முதலில் இந்தியா தங்கப் பதக்கம் வென்றது. ராணுவத்தைச் சேர்ந்த முரளிகாந்த் பெட்கர் 50 மீட்டர் நீச்சல் போட்டியில் 37.33 நொடிகள் என்கிற உலக சாதனையை நிகழ்த்தி இந்தியாவுக்கு தங்கமும், பெருமையும் தேடித்தந்தார். அடுத்த இரண்டு பாராலிம்பிக் போட்டியிலும் இந்தியா கலந்து கொண்டது என்றாலும், பதக்கம் வெல்ல முடியவில்லை.

1984-இல் நான்கு பதக்கங்களை வென்றது. குண்டு எறிதல் போட்டியில் வெள்ளிப் பதக்கம், ஈட்டி எறிதலில் வெண்கலப் பதக்கம், வட்டு எறிதலில் வெண்கலம் என்று அந்த நான்கு பதக்கங்களில் மூன்றை வென்றவர் ஜோகிந்தர் சிங் பேடி. நான்காவது பதக்கம், ஈட்டி எறிதலில் வெள்ளிப் பதக்கம் வென்ற பீமா ராவுக்கு கிடைத்தது.

டோக்கியோ பாராலிம்பிக்கில் ஜெய்ப்பூரைச் சேர்ந்த 19 வயது அவனி லெகரா இரண்டு சாதனைகளை நிகழ்த்தியிருக்கிறார். பாரா லிம்பிக்கில் தங்கப் பதக்கம் வெல்லும் முதல் இந்தியப் பெண் என்பது மட்டுமல்லாமல், ஒரே பாராலிம்பிக்கில் இரண்டு பதக்கங்கள் வென்ற முதல் பெண் என்கிற பெருமையையும் அடைந்திருக்கிறார் அவனி லெகரா.

தமிழகத்தைச் சேர்ந்த மாரியப்பன் தங்கவேலு வெள்ளிப் பதக்கம்தான் வெல்ல முடிந்தது என்றாலும், அவரது தன்னம்பிக்கையும் துணிவும் வியக்க வைக்கிறது. “தங்கம் வென்றிருக்க முடியும், பரவாயில்லை. பாரீஸ் பாராலிம்பிக்குக்குத் தயாராகிறேன்” என்கிற அவரது துணிச்சலான வார்த்தைகள் விளையாட்டு என்பத எல்லா தடைகளையும் பலவீனங்களையும் மீறி இலக்கை நோக்கிய பயணம் என்பதை பறைசாற்றுகிறது.

1960 ரோம் பாராலிம்பிக்கில் 23 நாடுகளும், 400 விளையாட்டு வீரர்களும் பங்கேற்றனர். 2020 டோக்கியோ போட்டியில் 10 மடங்கு அதிகமான போட்டியாளர்கள், மாற்றுத்திறனாளிகள் சளைத்தவர்களோ, இளைத்தவர்களோ அல்ல என்பதை உலகுக்கு உணர்த்துகிறார்கள் பாராலிம்பிக் சாதனையாளர்கள்.

## 4. National Automobile Scrappage Policy – 2021
**தேசிய பழைய வாகன நீக்க கொள்கை – 2021**

### 15 ஆண்டுகள் நிறைவடைந்த வர்த்தகரீதியான வாகனங்களைப் பயன்பாட்டிலிருந்து நீக்கும் கொள்கை:

வர்த்தகரீதியில் 15 ஆண்டுகளுக்கு மேலான பழைய வாகனங்களையும், தனி நபர்கள் பயன்படுத்தும் 20 ஆண்டுகளுக்கும் மேலான வாகனங்களையும் அழிக்கும் அல்லது பயன்பாட்டிலிருந்து நீக்கும் திட்டத்தை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்தார்.

"காற்று மாசு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பழைய வாகனங்களை பயன்பாட்டிலிருந்து நீக்கும் திட்டம் கொண்டுவரப்படுகிறது.

இதன்படி தனிநபர்கள் பயன்படுத்தும் வாகனங்கள் 20 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டால், அதற்கு தகுதிச்சான்று பரிசோதனை செய்யவேண்டும்.

அதேபோல, வர்த்தகரீதியான வாகனங்கள் 15 ஆண்டுகளை நிறைவடைந்திருந்தால், அதற்கு தகுதிச்சான்று பெற வேண்டும். பழைய வாகனங்களைத் திரும்பப்பெற்று புதிய வாகனங்கள் சாலையில் ஓட்டும்போது, எரிபொருள் மிச்சமாகும், காற்று மாசு குறையும், சுற்றுச்சூழலுக்குக் கேடு இல்லாமல் இருக்கும்".

முன்னதாக, மத்திய நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்கரி கடந்த வாரம் வெளியிட்ட அறிவிப்பில், " பொதுத்துறை நிறுவனங்களில் 15 ஆண்டுகளுக்கு மேல் உள்ள வாகனங்கள் கணக்கெடுக்கப்பட்டு பயன்பாட்டிலிருந்து நீக்கப்படும்.

இது 2022, ஏப்ரல் 1-ம் தேதி முதல் நடைமுறைக்கு வரும். இந்தத் திட்டம் மத்திய அரசு, மாநில அரசு வாகனங்களுக்கும், பொதுத்துறை நிறுவனங்களுக்கும் பொருந்தும். இந்தத் திட்டத்துக்கு ஒப்புதல் கிடைத்துவிட்டால், இந்தியா மிகப்பெரிய வாகனமுனையாக மாறும். வாகனங்களின் விலையும் குறையும். பழைய வாகனங்களில் இருந்து மறு சுழற்சிக்காக எடுக்கப்படும் பாகங்கள் மூலம் வாகனங்களின் விலை குறையும் ரூ.1.45 லட்சம் கோடிக்கு ஏற்றுமதியாகும்".

## 5. National Mission on Edible Oils

**எண்ணெய் வித்துக்களுக்கான தேசிய திட்டம்**

### பாமாயில் உற்பத்தியை ஊக்குவிக்க ரூ 11,040 கோடியில் திட்டம்:

உள்நாட்டில் பாமாவில் சாகுபடி உற்பத்தியை ஊக்குவிக்க ரூ 11,040 கோடி மதிப்பிலான தேசிய திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

அடுத்த 5 ஆண்டுகளில் பாமாயில் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கும் வெளிநாடுகளில் இருந்து அதை இறக்குமதி செய்வதைக் குறைப்பதற்கும் தேசிய அளவிலான திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. ரூ 11,040 கோடி செலவில் அந்தமான் நிகோபார் தீவுகளிலும் வடகிழக்கு மாநிலங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும். அதில் மத்திய அரசின் பங்களிப்பாக ரூ 8,844 கோடியும், மாநில அரசுகளின் பங்களிப்பாக ரூ 2,196 கோடியும் செலவிடப்படும். மத்திய அரசின் "தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம் - பாமாயில் உற்பத்தி" என்ற திட்டத்தின் கீழ் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்றார் அவர்.

மத்திய அமைச்சர் நரேந்திர சிங் தோமர் கூறியதாவது. நாடு முழுவதும், தற்சமயம், 3.70 லட்சம் ஹெக்டேரில் பாமாயில் சாகுபடி செய்யப்படுகிறது. வரும் 2025 – 26 ஆம் ஆண்டுக்குள் மேலும் 6.5 லட்சம் ஹெக்டேர் அளவுக்கு சாகுபடி பரப்பை அதிகரிக்க அரசு திட்டமிட்டுள்ளது. இதனால் பாமாயில் சாகுபடி பரப்பு 10 லட்சம் ஹெக்டேராக அதிகரிக்கும். இதன் மூலம், வரும் 2025 – 26ஆம் ஆண்டுக்குள் உள்நாட்டு பாமாயில் உற்பத்தி 11.20 லட்சம் டன்னாகவும் 2029 – 30 ஆம் ஆண்டுக்குள் 28 லட்சம் டன்னாகவும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாமாயில் சாகுபடியில் எண்ணெய் வித்துகள் வளர்த்து, லாபம் கிடைப்பதற்கு 5 முதல் 7 ஆண்டுகள் வரை ஆகும். அவ்வளவு காலம் சிறு விவசாயிகளால் காத்திருக்க முடியாது. மேலும், பாமாயில் வித்துகள் உற்பத்தியில் விவசாயிகள் வெற்றி பெற்றிருந்தாலும் அவர்களுக்கு உரிய விலை கிடைப்பதில் நிச்சயமின்மை நிலவி வந்தது.

வடகிழக்கு மாநிலங்களில் பாமாயில் சாகுபடி செய்வதற்கு உகந்த சூழல் உள்ளது. ஆனால், எண்ணெய் உற்பத்திக்கான தொழிற்சாலைகள் இல்லாததால் பாமாயில் சாகுபடி நடைபெறவில்லை.

இவற்றைக் கருத்தில் கொண்டு பாமாயில் உற்பத்தியை ஊக்குவிக்க, அதனை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தேசிய பாமாயில் உற்பத்தித் திட்டத்தின் கீழ் நிதியுதவி அளிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதேபோன்று விவசாயிகளுக்கு முதல் முறையாக விலை உத்தரவாதமும் அளிக்கப்படவுள்ளது என்றார் அவர்.

தேசிய சமையல் எண்ணெய் உற்பத்தி திட்டத்தின் ஒரு பகுதியாக வட கிழக்கு மாநிலங்கள், அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் பாமாயில் சாகுபடி திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

தேசிய சமையல் எண்ணெய்-பாமாயில் திட்டத்தை மத்திய அரசின் புதிய நிதி உதவித் திட்டமாக, குறிப்பாக வட கிழக்கு மாநிலங்கள் மற்றும் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் சிறப்பு கவனம் செலுத்தும் வகையில் இந்தத் திட்டத்தை அமல்படுத்த பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

சமையல் எண்ணெய்களின் இறக்குமதி மீதான சார்பு அதிகரித்திருப்பதால் அவற்றின் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பது அவசியமாகியுள்ளது. இந்த முயற்சியில் பாமாயில் உற்பத்தியும் முக்கியப் பங்கு வகிக்கிறது.

இந்தப் புதிய திட்டத்திற்காக ரூ. 11,040 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசின் பங்காக ரூ. 8,844

கோடியும் மாநில அரசின் பங்காக ரூ. 2,196 கோடியும், அவற்றுடன் மானியத் தொகையும் அடங்கும்.
இந்தத் திட்டத்தின் கீழ் பாமாயில் உற்பத்திக்காக 2025-26 ஆம் ஆண்டு வரை கூடுதலாக 6.5 லட்சம் ஹெக்டேர் நிலப்பரப்புடன், 10 லட்சம் ஹெக்டர் அளவை அடைய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கச்சா பாமாயில் உற்பத்தி 2025-26 ஆம் ஆண்டு வாக்கில் 11.20 லட்சம் டன்னாகவும், 2029-30 ஆம் ஆண்டில் 28 லட்சம் டன்னாகவும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
பாமாயில் உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகள் இந்த திட்டத்தின் வாயிலாக பெரிதும் பயனடைவார்கள். மேலும் இதன் மூலம் மூலதன முதலீடு அதிகரித்து, வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு, இறக்குமதி மீதான சார்பு குறைவதுடன், விவசாயிகளின் வருமானமும் அதிகரிக்கும்.

1991-92 ஆம் ஆண்டு முதல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் பாமாயில் உற்பத்தியை அதிகரிப்பதற்காக மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. 2014-15 ஆம் ஆண்டில் 275 லட்சம் டன்னாக இருந்த எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி, 2020-21 ஆம் ஆண்டில் 365.65 லட்சம் டன்னாக உயர்ந்தது. தற்போது 3.70 லட்சம் ஹெக்டேர் நிலப் பரப்பளவில் மட்டுமே பாமாயில் பயிரிடப்படுகிறது. பிற எண்ணெய் வித்துக்கள் உடன் ஒப்பிடுகையில் ஒரு ஹெக்டர் நிலப்பரப்பில் பாமாயில் 10 முதல் 46 மடங்கு அதிகமான உற்பத்தியைத் தருவதால், இந்த வகை எண்ணெய் வகை, பயிரிடுவதற்கு மிகவும் ஏற்றது.

இந்த விஷயத்தை கருத்தில் கொண்டும் 98% கச்சா பாமாயில் இறக்குமதி செய்யப்படுவதை கருதியும் நாட்டில் பாமாயில் பயிரிடுவதற்கான நிலப்பரப்பையும் உற்பத்தியையும் அதிகரிப்பதற்காக இந்தத் திட்டம் தொடங்கப்பட உள்ளது.

இந்த திட்டத்தில் 2 முக்கிய பகுதிகள் உள்ளன. பனை மரத்தில் இருந்து கிடைக்கும் பழங்களில் இருந்து எண்ணெய் தயாரிக்கப்படும். விவசாயிகள் உற்பத்தி செய்யும் இந்த பழங்களுக்கான விலைகள் தற்போது சர்வதேச கச்சா பாமாயில் விலை ஏற்றங்களுடன்

இணைக்கப்பட்டுள்ளது. முதன்முறையாக இந்த பழங்களுக்கான விலையை அரசு உறுதி செய்ய உள்ளது.

சர்வதேச கச்சா பாமாயில் விலையின் ஏற்ற இறக்கங்களிலிருந்து விவசாயிகள் பாதுகாக்கப்படுவார்கள். இந்த விலையானது, கடந்த 5 வருடங்களின் மொத்த சராசரி கச்சா பாமாயில் விலையாக மொத்த விலை குறியீட்டுடன் 14.3% பெருக்கப்படும். இது ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 1 முதல் அக்டோபர் 31 வரையிலான காலகட்டத்திற்கு நிர்ணயிக்கப்படும். இந்த உறுதிப்பாட்டால் அதிக பரப்பளவில் பாமாயிலைப் பயிரிடவும் அதன் மூலம் உற்பத்தி அதிகரிக்கவும் விவசாயிகளிடையே நம்பிக்கை ஏற்படும். மானிய தொகையின் மூலம் விவசாயிகளுக்கு நம்பிக்கை ஏற்படுவதுடன், கச்சா பாமாயில் விலையில் 14.3% முதல் 15.3% வரை தொழில்துறையினர் செலுத்த வேண்டி இருக்கும். இந்தத் திட்டம் நவம்பர் 1, 2037 வரை அமல்படுத்தப்படும். வடகிழக்கு மற்றும் அந்தமான் பகுதிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் கச்சா பாமாயில் விலையில் கூடுதலாக 2% தொகையை விவசாயிகளுக்கு அரசு வழங்கும். மத்திய அரசின் இந்த நடைமுறையைப் பின்பற்றும் மாநிலங்கள், மானிய தொகையைப் பெறும். இதற்காக மத்திய அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் மாநிலங்கள் ஈடுபடவேண்டும்.

இந்தத் திட்டத்தின் மற்றொரு முக்கிய நோக்கம், உள்ளீடுகள், இடையீடுகளின் ஆதரவை அதிகரிப்பதாகும். பாமாயிலை பயிரிடுவதற்கு கணிசமான உதவிகள் அளிக்கப்பட்டுள்ளன. இதன்படி ஒரு ஹெக்டேருக்கான உதவித் தொகை ரூ. 12000-லிருந்து ரூ.29000 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் பயிரை பராமரிப்பது மற்றும் ஊடுபயிர் இடையீடுகளுக்கான ஆதரவும் கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. பழைய தோட்டங்களை புதுப்பிப்பதற்காக ஒரு தாவரத்திற்கு ரூ. 250 வீதம் சிறப்பு உதவியும் அளிக்கப்படுகிறது.

தாவரங்களை பயிரிடுவதற்கான பொருட்களின் பற்றாக்குறையை எதிர்கொள்வதற்காக, இந்தியாவின் பிற பகுதிகளில் உள்ள விதை தோட்டங்களுக்கு 15 ஹெக்டேர் நிலப்பரப்பிற்கு ரூ. 80 லட்சமும், வடகிழக்கு மற்றும் அந்தமான் பகுதிகளில் 15 ஹெக்டேருக்கு ரூ. 100 லட்சமும் உதவித்

தொகையாக அளிக்கப்படும். மேலும் விதை தோட்டங்களுக்கு இந்தியாவின் பிற பகுதிகளில் ரூ. 40 லட்சமும், வடகிழக்கு மற்றும் அந்தமான் பகுதிகளுக்கு ரூ. 50 லட்சமும் உதவித் தொகையாக அளிக்கப்படும்.

இது தவிர வடகிழக்கு மற்றும் அந்தமான் பகுதிகளில் ஒருங்கிணைந்த விவசாயத்துடன் உயிரின் வேலிகள் போன்றவற்றிற்காக சிறப்பு உதவித்தொகையும் வழங்கப்படும். தொழில் துறைக்கான மூலதன உதவிக்காக வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் அந்தமானுக்கு அதிக திறன் கொண்ட சார்பு விகித அதிகரிப்புடன் 5 மீட்டர், ஹெக்டர் அளவிற்கு ரூ. 5 கோடி வழங்கப்படும். இதன்மூலம் இந்தப் பகுதிகளில் தொழில்துறையினர் வெகுவாக ஈர்க்கப்படுவர்.

**6. Net-Zero Emissions by 2050**

## நிகர பூஜ்ஜிய உமிழ்வு என்றால் என்ன? காலநிலை மாற்ற ஒப்பந்தத்திற்கு இந்தியா தெரிவிக்கும் ஆட்சேபனைகள் என்ன?

**NET-ZERO EMISSIONS BY 2050**

பாரிஸ் பருவநிலை ஒப்பந்தம், பூமியின் வெப்பநிலை அளவுக்கு அதிகமாக அதிகரித்துவிடாமல் தடுப்பதற்காக வடிவமைக்கப்பட்டது.

**பாரிஸ் ஒப்பந்தத்தில் அமெரிக்கா மீண்டும் இணையும் என்று தேர்தலுக்கு முன்னதாக ஜோ பைடன் வாக்குறுதி அளித்திருந்தது போலவே, அதிபராக பதவியேற்ற பிறகு ஜோ பைடன் இத்திட்டத்தை நிறைவேற்ற கையெழுத்திட்டுள்ளார்.**

பாரிஸ் பருவநிலை ஒப்பந்தம், பூமியின் வெப்பநிலை அளவுக்கு அதிகமாக அதிகரித்துவிடாமல் தடுப்பதற்காக வடிவமைக்கப்பட்டது. டொனால்ட் டிரம்ப் நிர்வாகத்தின் நான்கு ஆண்டுகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்த காலநிலை மாற்ற கூட்டாட்சியை தற்போது மீண்டும் உருவாக்க முயற்சிக்கும் அமெரிக்க ஜனாதிபதியின் காலநிலை

தொடர்பான சிறப்பு தூதர் ஜான் கெர்ரி மூன்று நாள் பயணமாக இந்தியாவுக்கு வருகை தரவிருக்கிறார்.

இந்த பயணத்தின் நோக்கம் என்னவென்றால், ஏப்ரல் 22 மற்றும் 23ம் தேதிகளில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடென் தலைமையில் விர்ச்சுவல் முறையில் நடக்கவிருக்கும் காலநிலை தலைவர்கள் உச்சிமாநாட்டிற்கு முன்னதாக சில குறிப்புகளை பரிமாறிக்கொள்வதாகும். அந்த கூட்டத்தில் பங்கேற்க அழைக்கப்பட்ட தலைவர்களில் பிரதமர் நரேந்திர மோடியும் அடங்குவார். மேலும், காலநிலை மாற்றத்தில் ஜோ பைடனின் முதல் பெரிய சர்வதேச தலையீடு இதுவாகும். மேலும் அதிலிருந்து கணிசமான விளைவை உறுதிப்படுத்த அவரது நிர்வாகம் ஆர்வமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய காலநிலை மாற்றத்தை மீட்டெடுப்பதற்கான முயற்சியில், வருகிற உச்சிமாநாட்டில் 2050 ஆம் ஆண்டிற்கான நிகர பூஜ்ஜிய உமிழ்வு இலக்குக்கு அமெரிக்கா தன்னை ஈடுபடுத்தும் என்று பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது. இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் உட்பட பல நாடுகள் ஏற்கனவே நூற்றாண்டின் நடுப்பகுதியில் நிகர பூஜ்ஜிய உமிழ்வு இலக்கை அடைவதாக உறுதியளிக்கும் சட்டங்களை இயற்றியுள்ளன. ஐரோப்பிய ஒன்றியம் ஐரோப்பா முழுவதும் இது தொடர்பான ஒரு சட்டத்தை செய்லபடுத்தி வருகிறது. அதே நேரத்தில் கனடா, தென் கொரியா, ஜப்பான் மற்றும் ஜெர்மனி உள்ளிட்ட பல நாடுகள் நிகர பூஜ்ஜிய உமிழ்வுக்கு எதிர்காலத்தில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளும் விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளன. சீனா கூட 2060-க்குள் நிகர பூஜ்ஜியத்திற்கு செல்வதாக உறுதியளித்துள்ளது.

அமெரிக்கா மற்றும் சீனாவுக்குப் பிறகு உலகின் மூன்றாவது பெரிய பசுமை இல்ல வாயுக்களை வெளியேற்றும் நாடு இந்தியா தான். இந்த நிலையில், அமெரிக்க சிறப்பு தூதர் ஜான் கெர்ரியின் இந்திய வருகைக்கான நோக்கங்களில் ஒன்று, இந்த திட்டம் தொடர்பாக மத்திய அரசின் கடுமையான எதிர்ப்பைக் கைவிட முடியுமா என்பதை தெரிந்துகொள்வதாகும். மேலும் 2050 நிகர பூஜ்ஜிய இலக்கை அடைவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி கொடுப்பதும் ஆகும்.

## நிகர பூஜ்ஜியத்தின் இலக்கு என்ன?

நிகர-பூஜ்ஜியம் என்பது கார்பன்-நடுநிலைமை என்றும் குறிப்பிடப்படுகிறது. ஒரு நாடு அதன் உமிழ்வை பூஜ்ஜியத்திற்குக் குறைக்கும் என்பது இதன் அர்த்தமல்ல. மாறாக, நிகர பூஜ்ஜியம் என்பது வளிமண்டலத்திலிருந்து கிரீன்ஹவுஸ் வாயுக்களை உறிஞ்சி அகற்றுவதன் மூலம் ஒரு நாட்டின் உமிழ்வை கட்டுப்படுத்தும் ஒரு நிலை ஆகும். இதற்கு காடுகள் போன்ற அதிக கார்பன் மூழ்கிகளை உருவாக்குவதன் மூலம் உமிழ்வை உறிஞ்சுவதை அதிகரிக்க முடியும். அதே நேரத்தில் வளிமண்டலத்திலிருந்து வாயுக்களை அகற்ற கார்பன் கேப்ச்சர் மற்றும் சேமிப்பு போன்ற எதிர்கால தொழில்நுட்பங்களும் தேவைப்படுகின்றன.

இந்த உறிஞ்சுதல் மற்றும் நீக்கும் முறை உண்மையான வாயு உமிழ்வை விட அதிகமாக இருந்தால், ஒரு நாட்டிற்கு எதிர்மறை உமிழ்வுகள் அதாவது வாயு உமிழ்வுகளே இல்லாமல் இருப்பது கூட சாத்தியமாகும். இதற்கு நல்ல எடுத்துக்காட்டாக பூட்டானை சொல்லலாம். இது பெரும்பாலும் கார்பன்-எதிர்மறை என்று விவரிக்கப்படுகிறது. ஏனெனில் அது வாயுக்களை வெளியிடுவதை விட அதிகமாக உறிஞ்சுகிறது.

2050 ஆம் ஆண்டிற்கான நிகர பூஜ்ஜிய இலக்கில் கையெழுத்திட கடந்த இரண்டு ஆண்டுகளாக ஒவ்வொரு நாட்டிலும் மிகவும் சுறுசுறுப்பான பிரச்சாரம் நடந்து வருகிறது. 2050 ஆம் ஆண்டளவில் உலகளாவிய கார்பன் நடுநிலைமை தான் பாரிஸ் ஒப்பந்த இலக்கை அடைய ஒரே வழி என்றும் வாதிடப்பட்டு வருகிறது. மேலும் இந்த ஒப்பந்தம் தொழில்துறைக்கு முந்தைய காலங்களுடன் ஒப்பிடும்போது கிரகத்தின் வெப்பநிலை 2°C க்கு அப்பால் உயராமல் இருப்பதை இலக்காக கொண்டுள்ளது. ஆனால் தற்போதைய கொள்கைகள் மற்றும் உமிழ்வைக் குறைக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் நூற்றாண்டின் தொடக்கத்தில் 3-4°C உயர்வைக் கூட தடுக்க முடியாது என்று ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

கார்பன் நடுநிலைமையின் குறிக்கோளானது ஒரு நீண்ட கால இலக்கைக் கருத்தில் கொண்டு செயப்படுத்தப்பட வேண்டியது. ஆனால் பல தசாப்தங்களாக இது குறித்து விவாதங்கள்

மட்டுமே நடைபெற்று வருகின்றன. நீண்டகால இலக்குகள் நாடுகளின் கொள்கைகள் மற்றும் செயல்களில் முன்கணிப்பு மற்றும் தொடர்ச்சியை உறுதி செய்கின்றன. ஆனால் இந்த இலக்கு என்னவாக இருக்க வேண்டும் என்பதில் இதுவரை எந்த ஒருமித்த கருத்துக்களும் இருந்ததில்லை.

முன்னதாக, 2050 அல்லது 2070 ஆம் ஆண்டுகளில், பணக்கார மற்றும் வளர்ந்த நாடுகளுக்கான உமிழ்வு-குறைப்பு இலக்குகளில் விவாதங்கள் நடைபெற்றன. அதில், பல தசாப்தங்களாக ஒழுங்குபடுத்தப்படாத உமிழ்வுகள் புவி வெப்பமடைதலுக்கும் அதன் விளைவாக ஏற்படும் காலநிலை மாற்றத்திற்கும் முக்கிய காரணமாகின்றன என்று கூறப்பட்டது. இருப்பினும், நிகர-பூஜ்ஜிய உருவாக்கம் எந்தவொரு நாட்டிலும் உமிழ்வு குறைப்பு இலக்குகளை அடைய முடிவுகளையும் ஒதுக்கவில்லை.

கோட்பாட்டளவில், ஒரு நாட்டின் தற்போதைய உமிழ் மட்டத்தை அல்லது அதிகரித்த உமிழ்வு மட்டத்தை உறிஞ்சவோ, அகற்றவோ முடிந்தால், அந்த குறிப்பிட்ட நாடு கார்பன்-நடுநிலையாக மாறலாம். இது வளர்ந்த நாடுகளின் கண்ணோட்டத்தில், இது ஒரு பெரிய நிவாரணமாக இருக்கும். ஏனென்றால் இப்போது வாயு உமிழ்வுகளின் சுமை அனைத்து நாட்டினராலும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. எனவே பழி ஒரு குறிப்பிட்ட நாட்டின் மீது மட்டும் விழாது.

## இந்தியாவின் ஆட்சேபனைகள்

இந்த இலக்கை இந்தியா மட்டுமே எதிர்த்து வருகிறது. ஏனெனில் இந்த திட்டத்தால் இந்தியா மிகவும் பாதிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது. அடுத்த இரண்டு அல்லது மூன்று தசாப்தங்களில், இந்தியாவின் உமிழ்வு உலகின் மற்ற நாடுகளை விட வேகமாக வளர வாய்ப்புள்ளது. ஏனெனில் இது நூற்றுக்கணக்கான மில்லியன் மக்களை வறுமையிலிருந்து வெளியேற்ற அதிக வளர்ச்சிக்கு அழுத்தம் கொடுத்து வருகிறது. ஆனால், அதிகரித்த உமிழ்வுகளுக்கு காடு வளர்ப்பு அல்லது மறு காடு வளர்ப்பு ஈடுசெய்ய முடியாது என்றும் இப்போது பெரும்பாலான கார்பன் அகற்றும் தொழில்நுட்பங்கள் நம்பமுடியாதவை அல்லது மிகவும் விலை உயர்ந்தவை என்றும் இந்தியா கூறிவருகிறது.

ஆனால் கொள்கை மற்றும் நடைமுறையில், இந்தியாவின் வாதங்களை நிராகரிப்பது என்பது எளிதல்ல. நிகர பூஜ்ஜிய இலக்கு 2015 பாரிஸ் ஒப்பந்தம், காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதற்கான புதிய உலகளாவிய கட்டமைப்பில் இல்லை என்றும் இந்தியா கூறிவருகிறது. பாரிஸ் ஒப்பந்தத்தில் ஒவ்வொரு கையொப்பமிட்டவரும் தன்னால் முடிந்த சிறந்த காலநிலை நடவடிக்கையை எடுக்க வேண்டும். நாடுகள் தங்களுக்கு ஐந்து அல்லது பத்து ஆண்டு காலநிலை இலக்குகளை நிர்ணயிக்க வேண்டும். மேலும் அவை அவற்றை அடைந்துவிட்டன என்பதை நிரூபிக்க வேண்டும். மற்ற தேவை என்னவென்றால், ஒவ்வொரு அடுத்தடுத்த கால அளவிற்கான இலக்குகள் முந்தையதை விட உயர்ந்த இலக்காக இருக்க வேண்டும்.

அதேசமயம், பாரிஸ் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவது இந்த ஆண்டு மட்டுமே தொடங்கப்பட்டுள்ளது. பெரும்பாலான நாடுகள் 2025 அல்லது 2030 காலத்திற்கான இலக்குகளை சமர்ப்பித்துள்ளன. பாரிஸ் ஒப்பந்த கட்டமைப்பிற்கு வெளியே நிகர பூஜ்ஜிய இலக்குகள் குறித்து ஒரு இணையான விவாதத்தைத் திறப்பதற்கு பதிலாக, நாடுகள் தாங்கள் ஏற்கனவே உறுதியளித்ததை வழங்குவதில் கவனம் செலுத்த வேண்டும் என்று இந்தியா வாதிடுகிறது. பாரிஸ் ஒப்பந்தத்தின் கீழ் அதன் மூன்று இலக்குகளை அடைவதற்கான பாதையில் இந்தியா நன்றாக செயல்பட்டு வருவதாகவும், மேலும் அவற்றை மாநாட்டில் மிகைப்படுத்த வாய்ப்புள்ளது என்றும் கூறப்படுகிறது.

உலகளாவிய வெப்பநிலை 2°Cக்கு மேல் உயராமல் இருக்க வைக்கும் பாரிஸ் ஒப்பந்த இலக்கிற்கு இணங்கக்கூடிய ஒரே G-20 நாடு இந்தியா மட்டுமே என்று பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன. காலநிலை மாற்றத்தில் மிகவும் முற்போக்கானதாகக் கருதப்படும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நடவடிக்கைகள் மற்றும் அமெரிக்க நாடுகள் கூட காலநிலை உயராமல் தடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று மதிப்பிடப்படுகின்றன. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இந்தியா ஏற்கனவே பல நாடுகளை விட காலநிலை குறித்த நடவடிக்கைகளை தொடர்பாக பல விஷயங்களை செய்து வருவதாக கூறியுள்ளது.

மேலும், வளர்ந்த நாடுகள் தங்களது கடந்தகால வாக்குறுதிகள் மற்றும் கடமைகளை ஒருபோதும் வழங்கவில்லை என்பதையும் மத்திய அரசு மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டியுள்ளது. பாரிஸ் உடன்படிக்கைக்கு முன்பு இருந்த காலநிலை ஆட்சியான கியோட்டோ உடன்படிக்கையின் கீழ் மற்ற நாடுகளுக்கு ஒதுக்கப்பட்ட உமிழ்வு வெட்டு இலக்குகளை எந்த ஒரு பெரிய நாடும் அடையவில்லை. சிலர் எந்தவிதமான விளைவுகளும் இல்லாமல் கியோட்டோ நெறிமுறையிலிருந்து வெளிப்படையாக வெளியேறினர்.

2020 ஆம் ஆண்டுக்குள் உமிழ்வை குறைப்பதாக வாக்குறுதிகளை அளித்த எந்த நாடுகளும் இதுதொடர்பாக எதுவும் தெரிவிக்கவில்லை என்று இந்தியா குற்றம் சாட்டியுள்ளது. 2050 கார்பன்-நடுநிலை வாக்குறுதியும் இதேபோன்ற தலைவிதியை சந்திக்கக்கூடும் என்று இந்தியா வாதிட்டது. அதே நேரத்தில், 2050 அல்லது 2060 க்குள் கார்பன்-நடுநிலைமையை அடைவதற்கான சாத்தியத்தை நிராகரிக்கவில்லை என்றும் ஆனால் ஒரு சர்வதேச உறுதிப்பாட்டை முன்கூட்டியே அமைக்க விரும்பவில்லை என்றும் இந்தியா தெரிவித்துள்ளது என கூறப்படுகிறது.

**7. National Electricity Policy 2021**
**தேசிய மின்சார கொள்கை 2021**

## தேசிய மின்சாரக் கொள்கை 2021

**முன்னுரை:**

மின்சாரச் சட்டம், 2003ன்கீழ், தயாரிக்கப்பட்டுள்ள வரைவு தேசிய மின்சாரக் கொள்கை, 2021 ஆனது, மின் உற்பத்தி, வழங்கல் மற்றும் முதலீட்டைத் திட்டமிடுவதற்கான வழிகாட்டும் கொள்கையாகும். இது தனியார் பங்களிப்பை குறிப்பாக மின்விநியோகத்தில் தனியார் பங்களிப்பை அதிகரிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

**தேசிய மின்சாரக் கொள்கை 2021ன் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:**

- ✓ தேசிய மின்சாரக் கொள்கையானது, மின்சாரத்தின் தரம், மைக்ரோ கிரிட்டுகள், பம்ப் ஹைட்ரோ ஸ்டோரேஜ், நிகழ்நேர மின் சந்தைகள் ஆகியவற்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

- ✓ வரைவு தேசிய மின்சாரக் கொள்கை இவ்வாறு சொல்கிறது: இந்தத் துறையானது உயர் AT&C இழப்புகள், போதிய திட்டமிடல் இல்லாமை, மோசமான பராமரிப்பு மற்றும் மோசமான உபகரணங்கள் பராமரிப்பு போன்ற பல்வேறு குறைபாடுகளால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இவை டிஸ்காம்களில் நிதி ஆரோக்கியத்தை பாதிப்பதுடன், மோசமான நுகர்வோர் திருப்தியையும் ஏற்படுத்துகின்றன.

- ✓ ஒன்றிய அரசு, நாட்டில் உள்ள 100 விழுக்காடு குடும்பங்களை தேசிய மின்சார விநியோக கட்டத்துடன் இணைத்தபோதிலும், மின்சாரத்தின் தரம் மற்றும் கால அளவு ஒரு பிரச்சினையாகவே தொடர்ந்து இருக்கிறது என்று தேசிய மின்சாரக் கொள்கை குறிப்பிடுகிறது.

- ✓ வாரத்தின் 7 நாட்களிலும் 24 மணிநேரமும் மின் விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்காக விநியோக முறையை வலுப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

- ✓ மாநிலங்களின் சீர்திருத்த மைல் கற்களுடன் ஒன்றிய உதவி இணைக்கப்பட்டுள்ள நிலையில், போதுமான விநியோக உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான ஒரு ஒருங்கிணைந்த திட்டத்தை உருவாக்க வேண்டும்.

- ✓ ரூ.3.05 டிரில்லியன் செலவை உள்ளடக்கி, டிஸ்காம்களுக்கான புதுப்பிக்கப்பட்ட சீர்திருத்தத் திட்டம் ஒன்றிய பட்ஜெட் 2021ல் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டமானது மாநிலங்களுக்கு தங்கள் சொந்த செயல் திட்டங்களை வகுக்கும் பொறுப்பை அளித்து, அதற்கேற்ப நிதியை வழங்கும்.

- ✓ மின்சார விநியோகத்தில் பொதுமக்கள் தனியார் கூட்டு என்பது செயல்திறனை மேம்படுத்துவதற்கும், நுகர்வோரின் திருப்தியை மேம்படுத்துவதற்கும் மற்றும் டிஸ்காம்களின் நிதி இழப்புகளைக் குறைப்பதற்கும் பயனுள்ள வழிகளில் ஒன்றாகும்.

- ✓ விநியோகத் துறையில் தனியார் மயமாக்கலை அறிமுகப்படுத்துவதற்கான விருப்பார்ந்த பாதையாக பொதுமக்கள் தனியார் கூட்டு மாதிரிகளில் ஒன்றாக உரிமையாளர் மாதிரி வெளிவந்துள்ளது. இந்த பொதுமக்கள் தனியார் கூட்டு மாதிரியின் மற்றொரு மாறுபாடு, ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு ஒரு துணை உரிமதாரர் மின் விநியோகஸ்தர் வடிவத்தில் இருக்கலாம் என்பதாகும்.

- ✓ புதை படிவமற்ற உற்பத்தி மூலங்கள் மூலமாக அதிகத் திறனைச் சேர்ப்பதற்கு இந்தியா உறுதிபூண்டுள்ள நிலையில், நிலக்கரி அடிப்படையிலான உற்பத்தித் திறன் மலிவான உற்பத்தியாகத் தொடர்வதால், அதனை நாட்டில் இன்னும் சேர்க்க வேண்டியிருக்கலாம். அதே சமயம் கடுமையான சுற்றுச் சூழல் விதிமுறைகளுக்கு இணங்க விளங்குவது குறிப்பாக பழைய நிலையங்களில், இவ்வாறு விளங்குவது ஒரு சவாலாகவே உள்ளது.

 PH: 044-24339436, 42867555, 9840226187

- ✓ இந்த வரைவு கொள்கையானது, பங்குதாரர்களிடமிருந்து கருத்துக்களைப் பெறுவதற்காக ஏப்ரல் 28, 2021 அன்று மின்சார அமைச்சகத்தால் பொது மன்றத்தில் வெளியிடப்பட்டது.

- ✓ இந்த தேசிய மின்சாரக் கொள்கையானது, பல புதிய கோட்பாடுகளை அறிமுகப்படுத்தியுள்ளது. தொலைதூரப் பகுதிகளில் மைக்ரோ கிரிட்களின் தேவை முதல் நிகழ்நேர மின்சக்தி சந்தை மற்றும் பம்ப் நீர் மின் உற்பத்தியில் முதலீடு செய்தல் வரை இதில் அடங்கும்.

- ✓ புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தியின் அதிகரித்து வரும் திறன் மற்றும் எரிவாயு, பெரிய நீர்மின் திட்டங்கள் (ஹைட்ரோ) போன்ற ஆற்றல் சமநிலை ஆதாரங்கள் இல்லாததால், தேசிய மின்சாரக் கொள்கையானது பம்ப் நீர்மின்சக்தி சேமிப்பின் திறனை (pump hydro storage) உணர்ந்துள்ளது. நாடு 96,524 மெகாவாட் பம்ப் ஹைட்ரோ ஸ்டோரேஜ் ஆற்றலைக் கொண்டுள்ளது என்றும் அதில் 4,785 மெகாவாட் வெளியேறியதாகவும் தேசிய மின்சாரக் கொள்கை குறிப்பிடுகிறது.

- ✓ தொடக்க நிலையில் மின் உற்பத்தியைப் பயன்படுத்துவதற்காகவும், மின்விநியோகம் வீணாவதைக் குறைப்பதற்காகவும், மின்விநியோக நிறுவனங்கள் (டிஸ்காம்கள்), மைக்ரோகிரிட்கள் அமைக்க வேண்டியதன் சாத்தியக் கூறை, குறிப்பாக இயற்கைப் பேரழிவுகள் ஏற்படக்கூடிய பகுதிகளில், ஆராய வேண்டும் என்று தேசிய மின்சாரக் கொள்கை பரிந்துரைக்கிறது. இந்த மைக்ரோ கிரிட்களுக்கு புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களிலிருந்து மின்சாரம் கிடைக்கச் செய்ய வேண்டும்.

## 8. Aspirational District Programme

## 9. Digital Communication Policy – 2018

**எண்ம தகவல் தொடர்பு கொள்கை – 2018**

### தேசிய எண்ம தகவல்தொடர்பு கொள்கை – 2018

**முன்னுரை அல்லது அறிமுகம்:**

தேசிய எண்ம தகவல்தொடர்பு கொள்கை (NDCP) 2018 எனப் பெயரிடப்பட்டுள்ள புதிய தொலைத்தொடர்பு கொள்கைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது, தற்பொழுது தொலைத் தொடர்பு ஆணையம் "எண்ம தகவல் தொடர்பு ஆணையம்" என மறுப்பெயரிடப்பட்டுள்ளது.

புதிய தேசிய எண்ம தகவல்தொடர்பு கொள்கை – 2018 ஆனது ஏற்கனவே உள்ள தேசிய தொலைதொடர்பு கொள்கை – 2012 க்கு மாற்றாகும். இது நவீன தொழில்நுட்பமான 5G , IOT, M2M போன்ற தொலைத்தொடர்பு நுட்பங்களை உள்ளடக்கியது.

**தேசிய எண்ம தகவல்தொடர்பு கொள்கையின் தேவை:**

தொலைத்தொடர்பு, மென்பொருள் இரண்டிலும் குறிப்பிடத்தக்கத் திறன்களைக் கொண்டுள்ள, புதிய எண்ம தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் மூலம், உற்பத்தித்திறனைத் திறப்பதற்கான தொழில்நுட்பங்கள் மற்றும் தளங்களை அத்துடன் பாதுகாப்பற்ற மற்றும் பின்தங்கிய சந்தைகளை அடைய இந்தியா தயாராக உள்ளது. இதனால் பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாடு அடைய ஊக்குவிக்கிறது. இது புதிய வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரங்களை உருவாக்குகிறது. மேலும் அடுத்த தலைமுறைக்குத் தேவையான சேவைகளை வழங்குதையும் உறுதி செய்கிறது.

கல்வியறிவு, பொருளாதார நிலைகள் மற்றும் நகரமயமாக்கல் போன்ற பல்வேறு குறியீடுகளில் இந்தியாவின் மக்கள்தொகை விவரங்கள் பரவலாக வேறுபடுகின்றன. அவர்களின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புகளை அதிகரிக்கும் கொள்கைகளை ஊக்குவிப்பது மிகவும் அவசியம். அதன்படி, இந்தக் கொள்கை வருவாயை அதிகப்படுத்துவதை விட உலகளாவிய பரப்பெல்லையை நோக்கமாகக் கொண்டுள்ளது.

விரைவான மற்றும் முன்நிகழ்ந்திராத தரவுகள் ஆனது, இணையம், சமூக வளைதளங்கள் மற்றும் எண்ம பணபரிவர்த்தனைகளின் விரிவாக்கம், தரவு நுகர்வு மற்றும் இந்தியா முழுவதுமான பில்லியனுக்கும் அதிகமான இந்தியர்களின் பொருளாதாரம், எண்ம தொழில்நுட்பங்கள் மற்றும் சேவைகள் ஆகியவை கைபேசி மூலம் விரைவாக வழங்குகிறது.

அகலப்பட்டை (Broad band) –யில் 10% அதிகரிக்க மதிப்பீடு செய்யப்பட்டால், மொத்த உள்நாட்டு உற்பத்தி 1% க்கும் அதிகமாக வழிவகுக்கும். இந்தியாவில் நீண்ட காலத்திற்கு போட்டி நிறைந்த தொலைத் தொடர்பு சந்தையை உருவாக்க ஒரு நிலையான கொள்கைகள் மற்றும் கட்டமைப்புத் தேவை

நாடு முழுவதும் மொபைல் மற்றும் பிராட்பேண்ட் இணைப்பை விரிவுப்படுத்துவற்கும், அடுத்த தலைமுறை வலையமைப்பு 5G மற்றும் செயற்கைக் கோள் தொடர்புகள் போன்றவற்றில் உள்ள வாய்ப்புகளை ஆராய்ந்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நான்காவது தொழில் புரட்சிக்கு உலகம் தயாராகி வரும் நிலையில், 5G, கிளவுட், IOT மற்றும் தரவுப் பகுப்பாய்வு போன்ற புரட்சிகர தொழில் நுட்பங்களில் ஒன்றிணைவதன் மூலம் இந்த வாய்ப்பை ஏற்க இந்தியா தயாராக இருக்க வேண்டும்.

தகவல் தொடர்பு மற்றும் எண்ம பொருளாதார துறையில் இந்தியா நியாயமான போட்டியை உருவாக்கி ஊக்குவித்து மற்றும் பாதுகாத்தல் வேண்டும்.

இது மூலதன தீவிர இயல்பு, நீண்டகால கொள்கை, உயர்தர மற்றும் நிலையான முதலீடுகளை ஈர்ப்பதைக் நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் மூலம் ஒழுங்குமுறை கட்டமைப்புகள், பொருத்தமான செயல்முறைகள், முன்னோக்கு முறையை இத்துறையில் உருவாக்க இயலும்.

கூடுதலாக, கொள்கை ஒழுங்குமுறைத் தடைகளை நீக்கவும், முதலீடுகளுக்கு இடையூறு விளைவிக்கும் ஒழுங்குமுறைச் சுமைகளைக் குறைக்கவும் நோக்கமாகக் கொண்டுள்ளது. புதிய மற்றும் நுகர்வோர் ஆர்வம், கொள்கைத் துறையில் நிறுவன நெறிமுறைகள் மற்றும் சட்டக் கட்டமைப்பை வலுப்படுத்தும் நடவடிக்கைகளை அடையாளம் காட்டுகிறது.

**தேசிய எண்ம தகவல் தொடர்பு கொள்கைகள் அம்சங்கள்**
**மூன்று முக்கிய குறிக்கோள்கள்:**

**இந்தியாவை இணைத்தல்**: வலுவான எண்ம தகவல் தொடர்பு உள்கட்டமைப்பை உருவாக்குதல்.

தேசிய அலைப்பட்டையின் (பிராட்பேண்ட்) குறிக்கோள் (ராஷ்ட்ரிய பிராட்பேண்ட் அபியான்) ஆனது 2022 க்குள் ஒவ்வொரு குடிமகனுக்கும் 50 எம்பிபிஎஸ் வேகத்தில் உலகளாவிய பிராட்பேண்ட் இணைப்பை வழங்குதல்

பாரத் நெட் - இந்தியாவில் அனைத்து கிராம பஞ்சாயத்துக்கும் 1 GBPS இணைப்பை 2020-க்குள் வழங்குதல் மற்றும் 2022 – க்குள் 10 GBPS – ஐ வழங்குதல்

கிராம்நெட் - அனைத்து முக்கிய கிராமப்புற, மேம்பாட்டு நிறுவனங்களையும் 10 MbPS லிருந்து 100 MbPPS –க்கு மேம்படுத்துதல்.

நகர்நெட் - நகர்ப்புறங்களில் 1 மில்லியன் பொது வை.்.பை ஹாட்ஸ்பாட்களை நிறுவுதல்

ஜான் வை.்.பை – கிராமப்புறங்களில் 2 மில்லியன் வை.்.பை ஹாட்ஸ்பாட்களை நிறுவுதல்.

2020-க்குள் அனைத்து கல்வி நிறுவனங்கள் உட்பட அனைத்து முக்கிய மேம்பாட்டு நிறுவனங்களுக்கும் தேவைக்கேற்ப 100 MbPS பிராட்பேண்டை இயக்குதல்.

நகரங்கள் மற்றும் கிராமப் புறங்களில் உள்ள வீடுகளுக்கு பைபர் வலைதளத்தை I, II & III ஆகிய கட்டங்களாக வழங்குதல். தேசிய பைபர் ஆணையத்தால் தேசிய எண்ம கட்டத்தை நிறுவுதல்.

இந்தியாவில் செயற்கைக் கோள் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களை வலுப்படுத்த SATCOM கொள்கையை மறுபரிசீலனை செய்வதன் மூலம், புதிய நிறமாலை பட்டைகளை கிடைக்கச் செய்தல், அவற்றை ஒதுக்கீடு செய்ய நிர்வாகச் செயல் முறைகளை ஒழுங்குப்படுத்துதல், செயற்கைக்கோள் தொடர்பு அமைப்புகளுக்கு அனுமதி போன்றவற்றை மேற்கொள்ளலாம்.

வாடிக்கையாளர்கள் திருப்தி, சேவையின் தரம் மற்றும் செயல்திறனை உறுதி செய்தல், தொலைத்தொடர்பு ஆம்புட்ஸ்மேன் நிறுவுவதன் மூலம் குறைகளை நிவர்த்தி செய்தல், சுற்றுச்சூழல் மற்றும் பாதுகாப்பு தரங்களை ஏற்றுக்கொள்வதையும் புதுப்பிக்கத்தக் ஆற்றலின் பயன்பாட்டை ஊக்குவிப்பதன் மூலம் விரிவான கொள்கையை தகவல் தொழில்நுட்பங்கள் துறையில் நிறுவுதல்.

**முன்னோடி இந்தியா:**

அடுத்த தலைமுறைக்கான முதலீடுகள், புதுமை தொழில்நுட்பங்கள் மற்றும் சேவைகளை செயல்படுத்துதல்.

எண்ம தகவல் தொடர்பு துறையில் 100 பில்லியன் அமெரிக்க டாலர் முதலீடுகளை ஈர்க்கவும், IOT – உடன் 5 பில்லியன் இணைப்பை இணைத்து விரிவாக்கவும், 2022-

க்குள் தொழிற்துறையில் 4.0 மாற்றத்திற்கு துரிதப்படுத்துதல் வேண்டும். எண்ம தகவல் தொடர்பு துறையில் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்குதல், இந்தியாவில் உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட ஐ.பி.ஆர் - களை (அறிவுசார் சொத்துரிமை) உருவாக்குதல் வேண்டும்.

எண்ம துறையில் நிலையான அத்தியாவசிய காப்புரிமைகளை (SEP) உருவாக்குதல்

புதிய திறன்களை வளர்ப்பதற்காக 1 மில்லியன் மனித வளத்திற்கு பயிற்சி / மறு பயிற்சி அளித்தல்.

**பாதுகாப்பான இந்தியா:**

இறையாண்மை, பாதுகாப்பு மற்றும் எண்ம தொழில்நுட்பத்தில் பாதுகாப்பை உறுதி செய்தல். உலக அளவில் தகவல் தொழில்நுட்பங்களை விரிவாக்குவதன் மூலம் இந்தியாவின் எண்ம பொருளாதாரத்தை மேம்படுத்துதல்

நிகர நடுநிலைக் கொள்கைகள் உறுதிப்படுத்துப்பட்டு, சீரான சேவையையும், எளிதில் அணுகக் கூடியதாகவும், அலைவரிசை மற்றும் நெட்வொர்க் திறன்கள் அடுத்தத் தலைமுறைகளும் கையாளக்கூடியதாக இருக்க வேண்டும்.

வலுவான எண்ம தகவல்தொடர்பு வலைபின்னல் பாதுகாப்பு கட்டமைப்பை உருவாக்கிப் பயன்படுத்துதல்.

பாதுகாப்பு சோதனைகள் மற்றும் பொருத்தமான பாதுகாப்பை நிறுவுதல் வேண்டும்.

மறைகுறியாக்கம் மற்றும் பாதுகாப்பு அனுமதிகள் தொடர்பான பாதுகாப்பு சிக்கல்களை கவனித்தல்.

பொருத்தமான நிறுவன வழிமுறைகள் மூலம் பொறுப்புணர்வை அமல்படுத்துதல், குடிமக்களுக்கு பாதுகாப்பான எண்ம தகவல் தொடர்பு உள்கட்டமைப்பு மற்றும் சேவைகளை உறுதி செய்தல்.

## 10. QUAD, SCO

### க்வாட் : முதல் உச்சி மாநாடு

சமீபத்தில், க்வாட் குழுவின் நான்கு நாடுகளின் தலைவர்கள் முதல் மெய்நிகர் உச்சிமாநாட்டில் டிஜிட்டல் முறையில் சந்தித்தனர். க்வாட் நாடுகளின் தலைவர்களால் தடுப்பூசி முன்முயற்சி, முக்கியத் தொழில் நுட்பம் மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவற்றில் ஒத்துழைப்பு வழங்க கூட்டு முயற்சி மேற்கொள்ள முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

இதுதவிர, கூட்டுக் கூட்டத்தின் அறிக்கை 'ஸ்பிரிட் ஆஃப் க்வாட்' மற்றும் திறந்த இந்தோ பசுபிக் எனப்படும், 'நிர்பந்தம் இல்லாத' உறுதிப்பாடு எனப்பட்டது. இராணுவ பாதுகாப்பிலிருந்து விலகி, இந்தோ – பசுபிக் பெருங்கடலில் பொருட்களை வழங்குவதில் கவனத்தை விரிவுப்படுத்துதல், மற்றும் குவாட்டின் முதல் உச்சி மாநாட்டில் அதன் நீண்டகால அரசியல் வாய்ப்புகளை மேம்படுத்தியுள்ளது. எனவே க்வாட் வெறுமனே ஒரு பேச்சுவார்த்தை நடத்தும் இடமாக மட்டுமன்றி, இந்த

உச்சிமாநாடு பரந்த கருத்து மற்றும் ஆழமான அடையாளங்கள் இரண்டையும் உள்ளடக்கியது.

**க்வாட் உச்சிமாநாட்டின் முக்கியத்துவம்**

**அமெரிக்காவின் பின் கொள்கை:**

அமெரிக்காவைப் பொறுத்தவரை, க்வாட் என்பது ஒரு உறுதிப்படுத்தப்பட்ட ஒரு ஆரம்ப உந்துதல் அமைப்பாகும், உலகளாவிய தலைமையின் அடிப்படையில் 'அமெரிக்கா மீண்டும் திரும்பி விட்டது'' என்ற ஜோ பிடனின் வாக்குறுதியின் ஒரு பகுதியாகும். இது பிராந்திய கூட்டணியை மீண்டும் உறுதிப்படுத்துவது மற்றும் சீனாவின் வளர்ந்து வரும் சவாலை எதிர்கொள்வது போன்றவற்றை உள்ளடக்கியது.

முன்னதாக, முனிச் பாதுகாப்பு மாநாட்டில் பீடென் மீண்டும் வெற்றி பெற முயன்றார். ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய நாடுகள் போன்ற ஐரோப்பிய நட்பு நாடுகளால் சீனாவை எதிர்கொள்ள ஒரு அட்லாண்டிக் கூட்டணியை இந்த மாநாடு முன்மொழிந்தது.

**ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியாவின் கடல்சார் நிலைகள்:**

சீனாவுடனான கடல்சார் அழுத்தங்கள், வர்த்தகம் மற்றும் தொலைத்தொடர்பு பிரச்சினைகள் காரணமாக, ஆஸ்திரேலியாவும் ஜப்பானும் க்வாட் கூட்டாண்மையில் ஆழமான ஒத்துழைப்பு நல்கிட ஆர்வமாக உள்ளன

க்வாட்டின் கூட்டாளிகளான ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா நாடுகளானது, இந்தியாவின் 'பிராந்திய பொருளாதார கூட்டாண்மைக்கு வெளியே இருக்கலாம்'' என்ற முடிவால் திருப்தியற்றவராக இருந்தன.

க்வாட் ஆனது பொருளாதார அதிகார மையமாக உருவெடுத்தால் அது முழு பிராந்தியத்திற்கும் பயனளிக்கும்.

**இந்தியாவின் புவிசார் எல்லைகளை விரிவுப்படுத்துதல்**

இந்தியாவை பொறுத்தவரை, க்வாட்டின் புதிய விதிமுறைகள் சீனாவுடன் LAC-ல் ஒரு பதற்றமான வருடத்திற்குப் பிறகு, அதிக முக்கியத்துவம் வாய்ந்த ஆதரவை வழங்கும்.

இது இந்தியாவின் மருத்துவத் திறனுக்கு ஊக்கமளிப்பதாகவும், தொழில் நுட்ப கூட்டாண்மைக்கான வாய்ப்புகள் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் உள்கட்டமைப்புக்கு நிதியுதவி போன்ற பிராந்திய ஒத்துழைப்புக்கு அதிக வாய்ப்புகளை வழங்குகிறது.

சீனாவுடன் வெளிப்படையான எதிர்ப்பை காட்டாத பல சிறிய நாடுகளின் உணர்வுகளுக்கு ஏற்ப பிராந்தியத்தில் இந்தியாவின் அணுகுமுறை இருந்தது.

இது இந்தியாவை க்வாட் நாடுகளின் உற்பத்தி இடமாக மாற்றவழி வகுப்பதோடு, சீனாவை சார்திருப்பதை இது குறைக்கிறது.

**க்வாட்டிற்கான புதிய விளக்கம்:**

க்வாட் உறுப்பு நாடுகள் தங்கள் வளங்கள் மூலம் (அமெரிக்க தொழில்நுட்பம், ஜப்பானிய நிதி, இந்தியாவின் உற்பத்தி திறன் மற்றும் ஆஸ்திரேலியாவின்

திட்டமிடும் திறன்) கோவிட் 19-க்கான ஒரு பில்லியன் தடுப்பூசி டோஸ்களை உற்பத்தி செய்து இந்தோ – பசுபிக் பகுதிகளில் விநியோகத்தது.

மேலும், க்வாட் நாடுகள் பாரிஸ் ஒப்பந்தத்தின் அடிப்படையில் கார்பன் உமிழ்வை குறைப்பதை உறுதி செய்வதோடு, தொழில்நுட்ப விநியோகச் சங்கிலிகள், 5G வலைப்பின்னல் மற்றும் உயர் தொழில்நுட்பவியல் ஆகியவற்றில் ஒத்துழைப்பை அளிக்கிறது.

இது நான்கு நாடுகளுக்கும் க்வாட்டிற்கான புதிய விளக்கத்தை உருவாக்க உதவும்.

**குவாட் உடன் தொடர்புடைய பிரச்சனைகள் RECP செயல்பாடு**

ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியாவைப் பொறுத்தவரை, சீனா மிகப்பெரிய வர்த்தகக் கூட்டாளியாக உள்ளது, 15 நாடுகளின் RCEP செயல்பாட்டுக்கு வந்தவுடன் மட்டுமே இந்த உறவு வளரும்.

இந்த சூழலில், ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா போன்ற க்வாட் உறுப்பு நாடுகள் இந்தியா மற்றும் அமெரிக்காவுடன் மூலோபாய ரீதியாக இணைவது கடினம்

**இந்தியாவின் இட ஒதுக்கீடு:**
இந்தியா, சீனாவுடனான தனது உறவுகள், LAC விலகல் பேச்சுவார்த்தைகள் மற்றும் பிரிக்ஸில் அதன் இதர பலதரப்பு கட்டமைப்பு பற்றிய உணர்திறன் மற்றும் SCO குழுக்கள், குவாட் ஈடுபாடுகளில் எச்சரிக்கையுடன் செயல்படும்.

**சீன எதிர்ப்பு சொல்லாட்சி:**
2007 இல் க்வாட் அமைப்பிற்கான முதல் படிகளானது, சீனாவின் பிராந்திய எல்லையை வரையறுக்க முயன்றது, "ஆசிய நேட்டோ" மற்றும் "புதிய பனிப்போர்" ஆகியவற்றை விவரித்தது.

வருடாந்திர மலபார் கடற்படை பயிற்சிகளுடன் க்வாட்டை இணைப்பது, க்வாட் - க்கு ஒரு இராணுவ அமைப்பாக உருவெடுப்பது மற்றும் இந்தோ – பசுபிக் முழுவதும் மிகுந்த அமைதியை உருவாக்கியது.

## ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி : பாதுகாப்பு ஒரு சவால் மற்றும் மூலகாரணம் தீவிரமயமாக்கல், ஆப்கானிஸ்தான் ஒரு உதாரணம்

- ✓ ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் 21வது உச்சி மாநாடு சமீபத்தில் தஜிகிஸ்தானின் துஷ்னபேவில் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்றது.
- ✓ இந்த உச்சி மாநாட்டில் ஆப்கானிஸ்தானின் கள நிலை மற்றும் அதன் உலகளாவிய விளைவுகள் குறித்து முக்கியமாக கவனம் செலுத்தப்பட்டது.

**இந்த அமைப்பின் ஒன்பதாவது முழுமையான உறுப்பினராக ஈரான் ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

**முக்கிய அம்சங்கள்**

**இந்தியாவின் நிலை:**

- ✓ தீவிரவாதம் மற்றும் தீவிரவாதத்திற்கு எதிராக வலுவான நிலைப்பாட்டை எடுத்தது, பயங்கரவாதத்திற்கு நிதியுதவி மற்றும் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை நிறுத்துவதற்கு இந்தக் குழு ஒரு கூட்டு அணுகுமுறையை கொண்டு வந்து ஒரு நடத்தை நெறிமுறையை உருவாக்க வேண்டும் என்று வலியுறுத்தியது.
- ✓ மத்திய ஆசியாவில் மிதமான இஸ்லாத்தின் முக்கியத்துவத்தையும் அது வலியுறுத்தியது.
- ✓ ஆப்கானிஸ்தானில் ஏற்பட்டுள்ள மோசமான மனிதாபிமான நெருக்கடி குறித்த கவலைகள், நிதி மற்றும் வர்த்தக தடைகள் காரணமாக ஆப்கானிஸ்தான் மக்களின் பொருளாதார துயரங்கள் அதிகரித்து வருவது பற்றிக் குறிப்பிடப்பட்டது.
- ✓ அந்த நாட்டில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள், சட்ட விரோத ஆயுதங்கள் மற்றும் மனித கடத்தல் ஆகியவற்றின் கட்டுப்பாடற்ற ஓட்டத்திற்கு வழிவகுக்கும் என்று சுட்டிக் காட்டப்பட்டது.
- ✓ மத்திய ஆசியாவுடனான தன் தொடர்பை அதிகரிக்க இந்தியா உறுதிபூண்டுள்ளது. அனைத்து நாடுகளின் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கு மரியாதை இருக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

**ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு:**

**பற்றி:**

- ✓ இது நாடுகளுக்கு இடையேயான ஒரு நிரந்தர சர்வதேச அமைப்பு ஆகும். இது 2001ல் உருவாக்கப்பட்டது.
- ✓ இந்த ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் சாசனம் 2002ஆம் ஆண்டில் கையெழுத்திடப்பட்டது. இது 2003ல் நடைமுறைக்கு வந்தது.
- ✓ இது பிராந்தியத்தில் அமைதி, பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையைப் பராமரிப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு யூரேசிய அரசியல், பொருளாதார மற்றும் இராணுவ அமைப்பு ஆகும்.
- ✓ இது வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்புக்கு (நேட்டோ) எதிர் அமைப்பாகப் பார்க்கப்படுகிறது. இது ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட பொருளாதார மற்றும் பாதுகாப்புப் பிரிவாகும். இது மிகப்பெரிய சர்வதேச அமைப்புகளில் ஒன்றாக உருவெடுத்துள்ளது.

**அதிகாரபூர்வ மொழிகள்:**

ரஷ்ய மொழி மற்றும் சீன மொழி.

**நிலையான உறுப்புகள்:**

- ✓ பெய்ஜிங்கில் உள்ள ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் தலைமைச் செயலகம்.
- ✓ தாஷ்கண்டில் உள்ள பிராந்திய பயங்கரவாத எதிர்ப்பு அமைப்பின் நிர்வாகக் குழு.

**தலைமைப் பதவி:**

இது உறுப்பு நாடுகளிடையே சுழற்சி முறையில் மேற்கொள்ளப்படுகிறது.

**தோற்றம்:**

- ✓ 2001ல் ஷாங்காய் உருவாக்கப்படுவதற்கு முன்பாக, கஜகஸ்தான், சீனா, கிர்கிஸ்தான், ரஷ்யா மற்றும் தஜிகிஸ்தான் ஆகிய நாடுகள் ஷாங்காய் ஐந்து உறுப்பினர்களாக இருந்தன.

- ✓ நான்கு முன்னாள் சோவியத் குடியரசுகளும் எல்லைகளில் நிலைத் தன்மையை உறுதி செய்வதற்காக, சீனாவுடன் நடத்திய எல்லை நிர்ணயம் மற்றும் இராணுவமயமாக்கல் பேச்சு வார்த்தைகளின் முடிவாக ஷாங்காய் ஐந்து (1996) அமைப்பு உருவானது.

- ✓ 2001ஆம் ஆண்டில் உஸ்பெகிஸ்தான் இந்த அமைப்பில் இணைக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஷாங்காய் ஐந்து என்ற இந்த அமைப்பு ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு என்று மறுபெயரிடப்பட்டது.

- ✓ 2017ஆம் ஆண்டில் இந்தியாவும் பாகிஸ்தானும் இந்த அமைப்பில் உறுப்பினர்களாகின. ஈரான் இந்த அமைப்பின் ஒன்பதாவது மற்றும் புதிய உறுப்பினர் ஆகும்.

- ✓ **இந்த அமைப்பில்** 2005ஆம் ஆண்டில் இந்தியா ஒரு பார்வையாளராக சேர்த்துக் கொள்ளப்பட்டது. யூரோசிய பிராந்தியத்தில் பாதுகாப்பு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை மையமாகக் கொண்ட குழுவின் அமைச்சர்கள் நிலையிலான கூட்டங்களில் பங்கேற்றுள்ளது.

## 11. Himachal landslide
**இமாச்சலபிரதேசம் நிலச்சரிவு**

## 12. 30 years of economic reforms
**பொருளாதார சீர்திருத்தத்தின் 30 ஆண்டுகள்**

## பொருளாதார சீர்திருத்தங்களின் 30 ஆண்டுகள்

சமீபத்தில், பொருளாதார தாராளமயமாக்கல் சீர்திருத்தங்களின் 30 வது ஆண்டு விழாவில் பேசிய இந்திய முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், நாட்டின் பெரிய பொருளாதார ஸ்திரத்தன்மை குறித்து கவலை தெரிவித்தார்.

- அவரைப் பொறுத்தவரை, கோவிட்-19 தொற்று நோயால் தூண்டப்பட்ட தற்போதைய பொருளாதார நெருக்கடியானது, 1991ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியை விட மிகவும் சவாலானது. மேலும், அனைத்து இந்தியர்களுக்கும் ஒரு கண்ணியமான வாழ்க்கையை உறுதி செய்வதற்காக, நாடு அதன் முன்னுரிமைகளை மறுபரிசீலனை செய்ய வேண்டியுள்ளது.

முக்கிய அம்சங்கள்

**1991ஆம் ஆண்டின் சிக்கல் மற்றும் சீர்திருத்தம்:**

- **1991ஆம் ஆண்டு சிக்கல்:** 1990-91ஆம் ஆண்டில், இந்தியா கடுமையான சமநிலை கொடுப்பனவு (Balance of Payments Crisis) நெருக்கடியை எதிர்கொண்டது. அப்போது இந்தியாவின் அந்நிய செலாவணி கையிருப்பானது, 15 நாள் இறக்குமதிக்கு மட்டுமே போதுமானதாக இருந்தது. இந்த சமநிலை கொடுப்பனவுக்கு பல்வேறு காரணிகள் இருந்தன:

  - நிதி பற்றாக்குறை: 1990-91ஆம் ஆண்டில் நிதிப் பற்றாக்குறையானது, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.4 விழுக்காடு ஆக இருந்தது.
  - **முதல் வளைகுடா போர்:** 1990-91ஆம் ஆண்டில், குவைத் மீது ஈராக் படையெடுத்ததன் காரணமாக எண்ணெய் விலை உயர்வால் நிலைமை மோசமாக ஆனது.
  - **விலைவாசி உயர்வு:** பணப்புழக்கத்தின் விரைவான அதிகரிப்பு காரணமாக, நாட்டின் பணவீக்கம் 6.7 விழுக்காடு முதல் 16.7 விழுக்காடு வரை அதிகரித்தது. இதன் காரணமாக நாட்டின் பொருளாதார நிலை மோசமாக ஆகிவிட்டிருந்தது.

- **1991ஆம் ஆண்டு சீர்திருத்தங்களின் இயல்பு மற்றும் நோக்கம்:** 1991ஆம் ஆண்டில் பெரும்-பொருளாதார நெருக்கடியிலிருந்து வெளியேறுவதற்காக, இந்தியா ஒரு புதிய பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்தியது. இது எல்பிஜி மாதிரி அல்லது தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் மாதிரியை அடிப்படையாகக் கொண்டது.

  - அப்போது வரலாற்றுச் சிறப்பு மிக்க 1991ஆம் தாராளமயமாக்கலின் முக்கிய காரணகர்த்தாவாக நிதியமைச்சர் மன்மோகன்சிங் விளங்கினார்.
  - எல்பிஜி மாதிரியின்கீழ் அடங்கும் விரிவான சீர்திருத்தங்கள் பின்வருமாறு:
    - **தொழில்துறை கொள்கையை தாராளமயமாக்கல்:** தொழில்துறை உரிமம் அனுமதி ராஜ்ஜியம் ஒழிப்பு, இறக்குமதி கட்டணங்களில் குறைப்பு போன்றவை.
    - **தனியார்மயமாக்கலின் தொடக்கம்:** சந்தைகளின் கட்டுப்பாட்டை நீக்குதல், வங்கி சீர்திருத்தங்கள் போன்றவை.
    - **உலகமயமாக்கல்:** பரிமாற்ற விகித திருத்தம், அந்நிய நேரடி முதலீட்டு மற்றும் வர்த்தகக் கொள்கைகளைத் தாராளமயமாக்குதல், கட்டாய மாற்றத்தக்க காரணத்தை நீக்குதல் போன்றவை.

- இந்த சீர்திருத்தங்கள் 1991 முதல் 2011 வரை காணப்பட்ட உயர் பொருளாதார வளர்ச்சி மற்றும் 2005 முதல் 2015 வரை வறுமையை கணிசமாக குறைத்தது ஆகியவற்றுக்காக வரவேற்கப்பட்டது மற்றும் பாராட்டப்பட்டது.

## இந்தியாவை மாற்றிய 10 சீர்திருத்தங்கள்

ஜிஎஸ்டி ஆனது வரி முறையை மாற்றியது. ஆனால் இந்தியாவின் சந்தை அடிப்படையிலான பொருளாதார அடித்தளத்தை உருவாக்கும் மற்றும் உயர் வளர்ச்சிக்கு உதவும் பல முக்கிய படிகளும் உள்ளன.

1. **புதிய தொழில் கொள்கை**
   - ✓ தொழில் உரிமம் பெறும் முறை ஒழிக்கப்பட்டது மற்றும் 18 பொதுத்துறை நிறுவனங்கள் படிப்படியாக தாராளமயமாக்கப்பட்டன.
   - ✓ ஏகபோகங்கள் மற்றும் கட்டுப்பாட்டு வர்த்தக நடைமுறைகள் சட்டம், 1969 ரத்து செய்யப்பட்டது.
2. **அந்நிய நேரடி முதலீடு மற்றும் வர்த்தகக் கொள்கை**
   - ✓ மூலதனப் பொருட்கள் மற்றும் இடைத்தரகர்களுக்கான இறக்குமதி உரிமம் ரத்து செய்யப்பட்டது. அதனால் 1993இல் சுதந்திரமாக இறக்குமதி செய்ய முடிந்தது. அதே சமயம், நெகிழ்வான மாற்று விகித ரெஜீமுக்கு மாறியது.
   - ✓ இந்தியா உலக வர்த்தக அமைப்பு மற்றும் அறிவுசார் சொத்துரிமை ஒப்பந்தத்தின் வர்த்தகம் தொடர்பான அம்சங்களில் சேர்ந்து கொண்டது.
   - ✓ உற்பத்தி செய்யப்பட்ட நுகர்பொருட்கள் மற்றும் வேளாண் பொருட்கள் இறக்குமதி மீதான அளவு குறித்த கட்டுப்பாடுகள் 2001ஆம் ஆண்டில் நீக்கப்பட்டன. இந்தக் கொள்கையானது இப்போது பல தொழில்களில் 100 விழுக்காடு வெளிநாட்டு உரிமையையும், வங்கி, காப்பீடு, தொலைத் தொடர்பு மற்றும் விமான நிறுவனங்களைத் தவிர மற்ற அனைத்திலும் பெரும்பான்மை உரிமையை அனுமதிக்கிறது. நடப்புக் கணக்கு மாற்றத்தக்கதானது 1994இல் அறிமுகம் செய்யப்பட்டது.
3. **புதிய நிறுவனங்கள்**
   - ✓ இந்திய பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியம் நிறுவப்பட்டது.
   - ✓ காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி அதிகார அமைப்பு மற்றும் ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி அதிகார அமைப்பு ஆகியவை அமைக்கப்பட்டன.
   - ✓ உள்கட்டமைப்பு நிதியளிப்பதற்காகவும், சிக்கலான சொத்து பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவும், ஒன்றிய பட்ஜெட் ‘வளர்ச்சி நிதி நிறுவனங்கள்’ மற்றும் ‘மோசமான வங்கிகளை’ உருவாக்கியது.
   - ✓ ஜிஎஸ்டி கவுன்சில் அமைக்கப்பட்டது.
4. **அரசு கடன்கள்**
   - ✓ உள்நாட்டு பத்திர சந்தைகள் மற்றும் கிளியரிங் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா அமைக்கப்பட்டது.
5. **வட்டி விகிதத்தை தாராளமயமாக்கல்**
   - ✓ வட்டி விகித கட்டுப்பாடுகள் ஒழிக்கப்பட்டன, சேமிப்பு வட்டி விகிதங்கள் முறைப்படுத்தாமல் விடப்பட்டன.
6. **பேசல் ஒப்பந்தங்கள்**
   - ✓ பேசல் ஒப்பந்தங்கள் எனப்படும் 3 சர்வதேச வங்கி ஒழுங்குமுறை ஒப்பந்தங்களின் தொடர் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
7. **தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் (NFSA) & மகாத்மா காந்தி தேசிய ஊரக**

**வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் (MGNREGS)**

- ✓ 75 விழுக்காடு கிராமப்புற மற்றும் 50 விழுக்காடு நகர்ப்புற மக்கள் இலக்கு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குறைந்த விலையில் உணவு தானியங்களைப் பெற்றுக் கொள்ள தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் அதிகாரம் அளித்தது.

- ✓ கிராமப் பகுதிகளில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத்திட்டம், ஒவ்வொரு ஆண்டும் 100 நாள் ஊதியத்திற்கான வேலைக்கு உத்திரவாதம் அளித்தது.

**8. ஆதார்**

- ✓ ஆதார் அமைப்பானது, ஒரு நபரின் அடையாளத்தை ஆன்லைனிலோ, ஆப்லைனிலோ ஒற்றை ஆதாரம் மூலம் அடையாளம் காண்பதற்கான வழிவகையை ஏற்படுத்திக் கொடுத்தது. இதன்மூலம் பிரதமர் ஜன் தன் யோஜனா, ஆயுஷ்மான் பாரத் மற்றும் உஜ்வாலா திட்டங்களைச் சேர்ப்பது எளிதாகியது.

**9. திவால் மற்றும் திவால் குறியீடு**

- ✓ ஐபிசி என்ற ஒரு விரிவான சட்டமானது, ஒரு கடனாளியின் பொருளாதார சரிவின் பின்விளைவு அம்சங்களையும், மறுவாழ்வு மற்றும் கலைப்பு அம்சங்களையும் ஒருங்கிணைத்தது.

**10. பணவியல் கொள்கைக் குழு**

- ✓ விலை நிலைத்தன்மையை பராமரித்தல் மற்றும் பொருளாதார வளர்ச்சி விகிதத்தை துரிதப்படுத்துதல் என்ற அடிப்படை நோக்கங்களுக்காக பணவியல் கொள்கைக் குழு ஏற்படுத்தப்பட்டது. இது உலகளாவிய சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப நாணயவியல் கொள்கை முடிவெடுப்பைக் கொண்டு வந்துள்ளது.

**2021 நெருக்கடி:**

- இந்தியப் பொருளாதாரம் 2021ஆம் ஆண்டில் 12.5 விழுக்காடும் 2022ஆம் ஆண்டில் 6.9 விழுக்காடும் வளர்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம் 2021 (The World Economic Outlook Report 2021) அறிக்கை குறிப்பிடுகிறது.

  இருப்பினும், இந்தப் பெருந்தொற்று, முறைசாரா துறையில் பெரிய அளவில் வேலையின்மையைக் கொண்டுள்ளது. பல தசாப்தங்கள் சரிவுக்குப் பிறகு வறுமை அதிகரித்து வருகிறது.

- சுகாதாரம் மற்றும் கல்வியின் சமூகத் துறைகள் பின்தங்கியுள்ளன, அவை நமது பொருளாதார முன்னேற்றத்திற்கு ஈடான வேகத்தைக் கொண்டிருக்கவில்லை.

  பெருந்தொற்று காலத்தின்போது பல உயிர்களும் பலரின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளன. இது நிகழ்ந்திருக்கக் கூடாது.

- மின் வணிக நிறுவனங்களுக்கான கொள்கை மூலம் இன்ஸ்பெக்டர் ராஜ் மீண்டும் வர உள்ளது.

- நிதி பற்றாக்குறைக்கு நிதியளிப்பதற்காக ரிசர்வ் வங்கியிடம் இருந்து அதிக கடன் வாங்குவது அல்லது ஈவுத் தொகை வடிவில் பணத்தைப் பிரித்தெடுக்கும் பழைய முறைக்கு இந்தியா திரும்பியுள்ளது.

- புலம்பெயர்ந்த தொழிலாளர் நெருக்கடி வளர்ச்சியானது, வளர்ச்சி மாதிரியில் இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது.

- 16 நாடுகளின் பிராந்திய விரிவான பொருளாதார கூட்டாண்மையிலிருந்து இந்தியா வெளியேற ஏற்கனவே முடிவு செய்துள்ளதால். இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை மீண்டும் வர்த்தக தாராளமயமாக்கலை எதிர்கொண்டுள்ளது.

## 13. DICGC Bill
## DICGC மசோதா

**வைப்பு காப்பீடு மற்றும் கடன் உத்தரவாதக் கழக மசோதா, 2021**

சமீபத்தில், ஒன்றிய அமைச்சரவை வைப்பு காப்பீடு மற்றும் கடன் உத்தரவாதக் கழக (**Deposit Insurance and Credit Guarantee Corporation**) மசோதா, 2021க்கு ஒப்புதல் அளித்தது.

பஞ்சாப் மற்றும் மகாராஷ்டிரா கூட்டுறவு வங்கி, யெஸ் வங்கி மற்றும் லக்ஷ்மி விலாஸ் வங்கி போன்ற வங்கிகளின் தோல்வியானது, இந்திய வங்கிகளில் வாடிக்கையாளர்கள் வைத்திருக்கும் வைப்புத் தொகைக்கு எதிரான குறைந்த அளவிலான காப்பீடு குறித்த விவாதத்தை மீண்டும் தொடங்கி வைத்துள்ளது.

**முக்கிய அம்சங்கள்**
**கவரேஜ்:**

- இந்த மசோதாவானது வங்கி அமைப்பில் 98.3 விழுக்காடு வைப்பாளர்கள் மற்றும் 50.9 விழுக்காடு வைப்பு மதிப்பை உள்ளடக்கியதாக இருக்கும். இது முறையே உலக அளவில் 80 விழுக்காடு மற்றும் 20-30 விழுக்காட்டிற்கு மேல் இருக்கும்.

- இது பிராந்திய கிராமப்புற வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் உட்பட அனைத்து வகையான வங்கிகளையும் உள்ளடக்கியதாக இருக்கும்.

- இதில் ஏற்கனவே தடை விதிக்கப்பட்டிருக்கும் வங்கிகள் மற்றும் இடைக்காலத்தின்கீழ் வரக்கூடிய வங்கிகளை உள்ளடக்கியதாக இருக்கும்.

  - **தடை (Moratorium) என்பது ஒரு சட்டபூர்வ கடமையை நிறைவேற்றுவதில் அல்லது கடனை செலுத்துவதில் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட தாமதமாகும்.**

**காப்பீட்டு அளவு:**

- ஒரு வங்கியானது இந்திய ரிசர்வ் வங்கியால் விதிக்கப்பட்ட தடைக்காலத்தில் இருந்தால், 90 நாட்களுக்குள் கணக்கு வைத்திருப்பவருக்கு ரூ.5 இலட்சம் வரையிலான நிதியை வழங்கும்.

- முன்னதாக, இயல்பு நிலைக்கு எதிராக காப்பீடு செய்யப்பட்ட தங்களின் வைப்புத் தொகையைப் பெறுவதற்கு, இன்னலுக்கு உள்ளான கடன் வழங்குபவரின் கலைப்பு அல்லது மறுசீரமைப்பு நிலை வரை, கணக்கு வைத்திருப்பவர்கள் பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டிய நிலை இருந்தது.

- ரு.1 இலட்சம் வரை இருந்த காப்பீட்டு வைப்புத் தொகை 2020 முதல் ரூ.5 இலட்சமாக உயர்த்தப்பட்டது.

**'வங்கிகளில் வாடிக்கையாளர் சேவைகள்' (2011) மீதான தாமோதரன் குழு, வருமான நிலை உயர்வு மற்றும் வங்கிகளின் வைப்புத் தொகை அதிகரிப்பு காரணமாக, உச்ச வரம்பை ஐந்து மடங்கு, அதாவது ரு.5 இலட்சமாக அதிகரிக்க பரிந்துரைத்தது.**

- வங்கிகள் தற்காலிக தடை விதிக்கப்பட்ட முதல் 45 நாட்களுக்குள், வைப்பு காப்பீடு மற்றும் கடன் உத்தரவாதக் கழகம், வைப்பு கணக்குகள் தொடர்பான அனைத்து தகவல்களையும் சேகரிக்கும். அடுத்த 45 நாட்களில், அது தகவல்களை மதிப்பாய்வு செய்து அதிகபட்சமாக 90 நாட்களுக்குள் வைப்புத் தொகையாளர்களுக்குத் திருப்பித் தரும்.

**காப்பீட்டு சந்தா:**

- இது வைப்பு காப்பீட்டு பிரிமியத்தை உடனடியாக 20 விழுக்காடு ஆகவும், அதிகபட்சமாக 50 விழுக்காடு ஆகவும் உயர்த்த அனுமதிக்கிறது.

- சந்தாத் தொகை வங்கிகளால் டிஐசிஜிசி-க்கு செலுத்தப்படுகிறது. காப்பீடு செய்யப்பட்ட வங்கிகள் முந்தைய அரையாண்டு முடிவில் உள்ள வைப்புத் தொகையின் அடிப்படையில், ஒவ்வொரு நிதியாண்டின் அரை வருடத்தின் தொடக்கத்திலிருந்து இரண்டு மாதங்களுக்குள் அரையாண்டுக்கு முன்பாகவே காப்பீட்டு சந்தா முன்பணங்களை கழகத்திற்குச் செலுத்துகின்றன.

- ஒவ்வொரு ரு.100 வைப்புக்கும் 10 பைசாவில் இருந்து 12 பைசாவாக அதிகரிக்கப்பட்டு 15 பைசா என்ற வரம்பு விதிக்கப்பட்டுள்ளது.

- இது ஒரு சாத்தியமான விதிமுறை மட்டுமே. செலுத்த வேண்டிய பிரிமியத்தின் அதிகரிப்பை நிர்ணயிப்பதானது, ரிசர்வ் வங்கியுடன் கலந்தாலோசித்து அரசின் ஒப்புதல் பெற்று மேற்கொள்ளப்படும்.

## 14. PM's 75th Independence Day Speech
பிரதமரின் 75வது ஆண்டு சுதந்திர தின உரை

**நாட்டின் 75வது சுதந்திர தின விழா: பிரதமர் நரேந்திர மோடி உரை..!!**

நாட்டின் 75வது சுதந்திர தினம் கொரோனா வைரஸ் தொற்று பரவலுக்கு மத்தியில் கட்டுபாடுகளுடனும், அதே நேரத்தில் வழக்கமான உற்சாகத்தோடும் நாடு முழுவதும் இன்று கொண்டாடப்படுகிறது. டெல்லி செங்கோட்டையில் பிரதமர் மோடி இன்று காலை மூவர்ணக்கொடியேற்றி வைத்து, வீர வணக்கம் செலுத்தினார்.

இந்த விழாவில் மூத்த மத்திய அமைச்சர்கள், அரசியல் தலைவர்கள், வெளிநாட்டு தூதர்கள், நீதிபதிகள், உயர் அதிகாரிகள் என பல தரப்பினரும் கலந்து கொண்டனர். டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவின் சார்பில் பதக்கங்களைப் பெற்ற வீரர்கள், வீராங்கனைகள் சுதந்திர தின விழாவில் கலந்து கொண்டனர்.

தேசியக்கொடியை ஏற்றிவைத்த பின்பு நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி உரையாற்றினார். அப்போது பேசிய அவர், நாட்டு மக்களுக்கு சுதந்திர தின நல்வாழ்த்துக்கள். மகாத்மா காந்தி, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் உள்ளிட்ட அனைவரின் தியாகத்தையும் நினைவுகூர்வோம். நமது விடுதலை போராட்ட வீரர்களை நினைவுகூர்வதற்கான தினம் இன்று ஒலிம்பிக்கில் பங்கேற்ற அனைவருக்கும் பிரதமர் மோடி கைகளை தட்டி பாராட்டு தெரிவித்தார்.

ஒலிம்பிக்கில் நம் நாட்டு வீரர்கள் திறமையுடன் விளையாடி பெருமை சேர்த்தனர். வருங்கால தலைமுறைகளுக்கு உற்சாகம், விழிப்புணர்வை விளையாட்டு வீரர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஒலிம்பிக் தடகளத்தில் புதிய வரலாற்றை படைத்தது பெரிய விஷயம்.

ஆகஸ்ட் 14ம் தேதி நாடு பிரிவினை அடைந்த போது பொதுமக்கள் கடும் துயரை அனுபவித்தனர். கொரோனா தடுப்பூசி செலுத்துவதில் உலகத்திலேயே நம் நாடுதான்

முதலிடத்தில் உள்ளது. இந்தியாவில் கொரோனாவுக்கு எதிராக தடுப்பூசியை உருவாக்கியுள்ளோம் என்பது பெருமைக்குரிய விஷயம். கொரோனா காலத்தில் மருத்துவர்கள், செவிலியர்கள், தடுப்பூசி கண்டுபிடித்தவர்கள் என அனைவருக்கும் எனது வணக்கங்கள்.

உலகின் முன்னணி நாடுகளில் கொரோனா தடுப்பூசி எப்போது கிடைக்கத்தொடங்கியதோ அப்போது இந்தியாவிலும் கிடைக்கத்தொடங்கியது. கொரோனா பெருந்தொற்று காலத்தில் 80 கோடி மக்களுக்கு இலவசமாக ரேஷன் பொருட்கள் வழங்கினோம். நகரம், கிராமம் என்று இல்லாமல் நாடு முழுவதும் ஒரே மாதிரியான வளர்ச்சியை அடைய உள்கட்டமைப்புகள் வலுப்படுத்தப்படும். நாட்டு மக்களின் வளர்ச்சிக்காக நிறைய திட்டங்களை வகுத்திருக்கிறோம்.

மின் இணைப்பு, ஓய்வூதியம், கேஸ் இணைப்பு உள்ளிட்டவற்றை கடைக்கோடி மக்களுக்கும் கொண்டு சேர்த்திருக்கிறோம். கடந்த இரண்டு வருடத்தில் நான்கு கோடி மக்களுக்குச் சுத்தமான குடிநீர் கிடைப்பது உறுதி செய்யப்பட்டிருக்கிறது. அனைத்து கிராமங்களுக்கும் சாலை, அனைவருக்கும் வங்கி கணக்கு என்பதுதான் நமது நோக்கமாக இருக்க வேண்டும். அரசின் திட்டங்கள் ஒரு சிலரை சென்று சேராமல் போகும் அவல நிலை இப்போது இல்லை. நாட்டின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஆரோக்கியத்தை அளிப்பது அரசின் முக்கிய பணியாகும். ஏழைகளுக்கு பல்வேறு திட்டங்கள் மூலம் நல்ல சத்தான அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

'மக்கள் மருந்தகம்' திட்டத்தின் மூலம் ஏழை மக்களுக்கும், நடுத்தர மக்களுக்கும் குறைந்த விலையில் தரமான மருந்துகள் கிடைக்கின்றன. நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் நல்ல மருத்துவ வசதி பெற வேண்டும் என்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. பட்டியலினத்தவர்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு இட ஒதுக்கீடு திட்டமும் செயல்படுத்தப்பட்டுள்ளது. மருத்துவ மாணவர்கள் சேர்க்கை இடஒதுக்கீடு திட்டத்தை சமீபத்தில் தான் நாங்கள் செயல்படுத்தி இருக்கிறோம். வடகிழக்கு மாநிலங்கள் ஜம்மு காஷ்மீர், லடாக், மலை சாதியினர் வாழும் பகுதிகளை

தகவல்தொடர்பு கொண்டு இணைக்க வேண்டும். வடகிழக்குப் பகுதியில் சுற்றுலா, சாகச சுற்றுலா, பனை மரத் தோப்புகள் ஆகியவற்றை வளர்க்க தனி கவனம் செலுத்தப்படும். ஆழ் கடல் பரிசோதனை மூலம் புதிய வளங்களை கண்டறியும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. பின்தங்கிய 110 மாவட்டங்களில் வளர்ச்சிப் பணிகளுக்கு தனி கவனம் செலுத்தப்படுகிறது.

இன்னும் சிறிது காலத்தில் மிகப்பெரிய திட்டம் ஒன்றை நாட்டுக்கு கொண்டுவர இருக்கிறோம். நாட்டின் வளர்ச்சிக்கு எதிராக உள்ள தடைகளை தாண்டி செல்லும் வகையில் அந்த புதிய திட்டம் இருக்கும். நம்முடைய தொழில்துறை உலக அளவில் போட்டியிட இந்த திட்டம் உதவி செய்யும். 'கத சக்தி' என்ற இந்த வேகமான திட்டம் நாட்டின் வளர்ச்சியை வேகமடையச் செய்யும். போர் விமானங்களை தயாரிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளோம். நம் நாட்டிலிருந்து செல்ஃபோன்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. நம்முடைய உற்பத்தி தொழில்துறை உலக சந்தையில் போட்டியிட வேண்டும். நம்முடைய தயாரிப்புகள் தரமானதாக இருக்கவேண்டும். அதில் மட்டுமே நம் நாட்டின் பெருமை உள்ளது. கிராமங்களில்கூட டிஜிட்டல் இந்தியாவின் தாக்கம் அதிகரித்துள்ளது. நாட்டிலும், வெளி நாட்டிலும் ஒரு மிகப்பெரிய சந்தையை உருவாக்க டிஜிட்டல் இந்தியா திட்டம் உதவும். காய்கறிகள், தானியங்கள் உற்பத்தியில் விஞ்ஞானிகளின் உதவி கிடைத்து வருகிறது. நாட்டின் பெருமையின் சின்னமாக சிறு விவசாயிகள் மாற வேண்டும் என விரும்புகிறேன். நாட்டின் வளர்ச்சியில் இளைஞர் சமுதாயம் நல்ல முயற்சியில் ஈடுபட புதிய கல்விக் கொள்கை தேவைப்படுகிறது. மக்கள் விரோத சட்டங்களை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும். புதிய கல்விக் கொள்கை அவசியம் தேவைப்படுகிறது. நாட்டில் துரதிஸ்டவசமாக மொழிகள் தொடர்பாக தேவையற்ற விவாதங்கள் ஏற்பட்டுள்ளன. ஒரு ஏழையின் மகனோ, மகளோ தாய்மொழியில் படிக்கும்போது மட்டுமே உரிய நியாயம் கிடைக்கும்'' என்றார்.

## 15. Ayushman Bharat Digital Mission
### ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் திட்டம்

**எண்ணிம சுகாதார அட்டை புரிந்துகொள்வது எப்படி?**

அண்மையில், அயுஷ்மான் பாரத் எண்ணிம இயக்கத்தைப் பிரதமர் மோடி தொடங்கிவைத்தார். இதன்படி, இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் "எண்ணிம சகாதார அட்டை" இலவசமாக வழங்கப்பட இருக்கிறது. நாட்டில் சுகாதார வசதிகளை வலுப்படுத்தும் இயக்கத்தின் நீட்சி இது. ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் சுகாதாரப் பதிவை எண்ணிம முறையில் பாதுகாக்கும்.

"எண்ணிம சுகாதார அட்டை"யானது ஆதார் அட்டை போலவே தனித்தன்மை உடையது. பயனாளி இந்த அட்டையில் 14 இலக்க எண்ணைப் பெறுவார். இந்த எண், சுகாதாரத் துறையினருக்கு அவரை அடையாளம் காட்டும். இதில் அவருடைய உடல் நலம் தொடர்பான, உண்மையான தகவல்கள் பதிவு செய்யப்படும். எந்த நோய்க்கு. எப்போது, எந்த மருத்துவமனையில், என்ன சிகிச்சை அளிக்கப்பட்டது. என்னென்ன பரிசோதனைகள் செய்யப்பட்டன. என்னென்ன மருந்துகள் வழங்கப்பட்டன, பிற உடல்நப் பிரச்சினைகள் உண்டா என்பது போன்ற தகவல்கள் இதில் இருக்கும். இதன் மூலம், அவருடைய மருத்துவ வரலாற்றை முழுமையாக அறிய முடியும்.

இந்த அட்டையைக் கைபேசி எண் அல்லது ஆதார் எண் மூலம் உருவாக்கலாம். ndhm.gov.in எனும் இணையதளத்துக்குச் சென்று இதைப் பெற முடியும். இந்த அட்டையைச் சுயமாக உருவாக்க இயலாதவர்கள் அரசு மற்றும் தனியார் மருத்துவமனை, ஆரம்ப சுகாதார மையம், சுகாதாரம் மற்றும் குடும்பநல மையம் அல்லது பதிவுபெற்ற சுகாதார அதிகாரி மூலமும் உருவாக்கிக் கொள்ளலாம்.

**தகவல்களை உள்ளிடும் முறை:**

எண்ணிம சுகாதார அட்டையில், பயனாளியின் மருத்துவத் தகவல்களை உள்ளிடுவதற்கு, முதலில் இந்தியாவில் உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள், மருத்துவகங்கள், மருத்துவர்கள் அகியோர் பதிவு செய்யப்படுவார்கள். இதைத் தொடர்ந்து, பயனாளி "NDHM ஹெல்த் ரெக்கார்ட்ஸ் செயலியைப் பதிவிறக்கம் செய்ய வேண்டும். பயனாளியின் 14 இலக்க எண் மற்றும் கவுச்சொல் மூலம் இதனுள் நுழையலாம். இந்தச் செயலியில் பயனாளி சிகிச்சை பெற்ற மருத்துவமனையை இணைத்தால், அங்குள்ள பயனாளியின் உடல்நலம் தொடர்பான தகவல்கள், அவரது கைபேசி செயலிக்கு வந்துவிடும். மருத்துவமனைக்கான "க்யூஆர்" குறியீட்டை ஸ்கேன் செய்தும் அந்தந்த மருத்துவமனையை இணைக்க முடியும். பயனாளி அடுத்தடுத்துப் பெறும் சிகிச்சை, நோயறிதல், சோதனை விவரங்கள், பிற தகவல்கள் ஆகியவற்றையும் இந்தச் செயலியில் உள்ளிடலாம். நாடெங்கிலும் உள்ள மருத்துவர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் எந்தவொரு மருத்துவமனையும் பயனாளியின் சுகாதார அட்டை மூலம், அவரது உடல்நலத் தகவல்களைப் பார்க்க முடியும். இதற்குப் பயனாளியின் ஒப்புதல் பெறுவது அவசியம். பயனாளி எப்போது வேண்டுமானாலும் சுகாதாரப் பதிவை நிறுத்தவோ நீக்கவோ முடியும். அவரது தகவல்கள் பகிரப்பட்ட விவரத்தையும் அறிய முடியும்.

**என்னென்ன நன்மைகள்?**

எண்ணிம சுகாதார அட்டையில் மிகப்பெரிய நன்மை என்னவென்றால், இதுவரை தனியொரு மருத்துவமனையில் அல்லது மருத்துவமனைக் குழுவில் மட்டுமே பதிவு

செய்யப்பட்ட பயனாளியின் சுகாதாரக் தகவல்களை இனிமேல் நாட்டின் எல்லா மருத்துவக் கட்டமைப்புகளிலும் ஒரே நேரத்தில் பகிர்ந்துகொள்ள முடியும். பயனாளி முதல் முறையாக அதைப் பயன்படுத்திய பிறகு, மறுமுறை அதே மருத்துவரிடம் வந்தாலும், வேறு மருத்துவரிடம் சென்றாலும், முந்தைய சிகிச்சைகள், மருந்துச் சீட்டுகள் மற்றும் சோதனை விவரங்களை அவருடன் எடுத்துச் செல்லத் தேவையில்லை. இந்தியாவில் மட்டுமல்லாமல், வெளிநாடுகளுக்குச் சிகிச்சைக்குச் சென்றாலும், பயனாளியின் கடந்த கால சுகாதாரத் தகவல்களை இந்தத் தனித்துவமான அட்டை மூலம் தெரிந்துகொண்டு சிகிச்சை அளிப்பது எளிதாகும். மேலும், மருந்துவ ஆவணம் தொலைந்துவிட்டால் கவலையில்லை. பழைய சோதனை அறிக்கைகள் இல்லையென்றால், எல்லாச் சோதனைகளையும் மறுபடியும் மேற்கொள்ள வேண்டியதில்லை. பிற நோயாளிகள் ஒப்புதலுடன் பயனாளிக்குத் தெரிந்த ஒருவரின் உடல்நலப் பதிவுகளையும் அவருடைய அட்டையில் நிர்வகிக்கலாம். இது நேரத்தையும் பணத்தையும் மிச்சப்படுத்தும். காகிதத் தேவையைக் குறைக்கும். கோப்புகள் வைக்கும் இடம் சுருங்கிவிடும். போலி மருத்துவர்களை இனம் கண்டுவிடும். எதிர்காலத்தில் பொதுச் சகாதார முன்னேற்றத்துக்குத் தேவையான முன்திட்ட வரைவைத் தயாரித்து, நிதி ஒதுக்கீடு செய்வதும் அத்திட்டத்தைச் செயல்படுத்துவதும் மேம்படும்.

**சவால்கள்**

இந்த அட்டையின் தகவல் பாதுகாப்பு தொடர்பில் பயனாளிகளுக்கு ஏற்பட்டுள்ள அச்சம்தான் முதல் பிரச்சினை. கடந்த காலத்தில் ஆதார் அட்டைத் தகவல்கள் திருடப்பட்ட நிகழ்வுகளை முன்வைத்து, நாட்டில் சைபர் பாதுகாப்பு கேள்விக்குறியாக உள்ளது என்றே வல்லுநர்கள் கவலைப்படுகின்றனர். மேலும், “சர்வதேச ஆராய்ச்சியாளர்கள், காப்பீட்டு நிறுவனங்கள், மருந்துத் தயாரிப்பு நிறுவனங்கள் போன்றவற்றுக்குத் திருடப்பட்ட சுகாதாரத் தகவல்களை உதவலாம். தகவல்களைப் பதிவிடும்போது, மனிதத் தவறுகள் ஏற்படலாம்; தவல்களள் விட்டுப்போகலாம்; வேண்டுமென்றே மாற்றப்படலாம். இவற்றைக் கண்காணிப்பது யார் என்ற கேள்விக்கு இதில் விடையில்லை. நோய் குறித்த இந்தப் பின்னணிகள், அந்த நபரின் நோயையும் சிகிச்சையையும் மாற்றிவிடலாம். இது அவரது உடல்நலனுக்கு ஆபத்தை வரவழைக்கலாம்“ என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர். சமீபத்தில், “இந்தியாவில் தகவல் பாதுகாப்புக்கெனத் தனிச்சட்டம் இல்லை. “தகவல் பாதுகாப்பு மசோதா – 2019“ மட்டுமே உள்ளது. தனிச் சட்டம் இயற்றினால் மட்டுமே தகவல் தொடர்பில் தவறிழைப்பவர்களுக்கு அபராதம் அல்லது தண்டனை வழங்க முடியும்“ என்கிறார் பிரபல இணையப் பாதுகாப்பு நிபுணர் பவன்துக்கல்.

அடுத்து, நாட்டில் கிராமப்புறம், கடலோரம் மற்றும் மலைவாழிடங்களில் திறன்பேசி மற்றும் இணைய வசதிகள் குறைவாகவே இருக்கும். அங்குள்ளவர்களுக்கு இந்த அட்டையின் தொழில்நுட்பத்தைப் புரிந்துகொள்ளும் ஆற்றலும் குறைவு. மொழி ஒரு தடையாக இருக்கும். இவை இந்தக் திட்டத்துக்குப் பெரிய சவாலாக இருக்கும். எனவே, எண்ணிம சுகாதார அட்டையை அனைவரும் பயன்படுத்த வேண்டுமென்றால், கிராமம் தொடங்கி எல்லா அரசு மருத்துவமனைகளிலும் இணையம் சார்ந்த மருத்துவக் கட்டமைப்புகளை வலுப்படுத்த வேண்டும். தகவல்களை உள்ளிடுபவர்கள் மற்றும் அவற்றைச் சரிபார்த்துக் கையாளும் மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும். முன்திட்டமிடுதல் மூலம் சுகாதாரத் துறைக்குத் தேவையான நிதி ஒதுக்கி, மாநிலங்களுக்குப் பகிர்வது முக்கியம். இந்த அட்டை, இந்திய சுகாதாரத் துறையை மேம்படுத்தும் புரட்சிகர இயக்க சக்தியாக இருக்கும் என்ற பிரதமரின் அறைகூவல் உண்மையாக வேண்டுமானால், இவை அனைத்தும் அவசியமான அடிப்படைகள்.

16. **PMFME Scheme**
**PMFME திட்டம்**

17. **United in Science 2021 report**
**அறிவியலால் ஒன்றிணைவோம் அறிக்கை 2021**

18. **e-Shram**

19. **PLI Scheme**
**PLI திட்டம்**

20. **NHEM**

21. **Financial Inclusion**
**நிதி உள்ளடக்கம்**

22. **SMILE Scheme**
**SMILE திட்டம்**

23. **G-SAP**

24. **15th Finance Commission Report**
**15வது நிதிக்குழு அறிக்கை**

**15வது நிதி ஆணையத்தின் பரிந்துரைகள்: வள ஒதுக்கீடு**

**முக்கிய அம்சங்கள்**

- **செங்குத்து பகிர்வு (ஒன்றிய அரசின் வரிகளை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளித்தல்):**

  அது 2020-21ஆம் ஆண்டுக்கான தன்னுடைய இடைக்கால அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு, அதே அளவாகிய 41 விழுக்காடு செங்குத்து பகிர்வை பராமரிக்க பரிந்துரைத்துள்ளது.

  இது 14வது நிதி ஆணையம் பரிந்துரைத்துள்ளவாறு, பகிர்ந்தளிக்கக்கூடிய தொகுப்பில் அதே 42 விழுக்காடாக உள்ளது.

- இது முன்னாள் ஜம்மு காஷ்மீர் மாநிலம் தற்போது லடாக் மற்றும் ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசங்களாக மாற்றியமைக்கப்பட்டதைத் தொடர்ந்து சுமார் 1 விழுக்காடு அளவுக்கு தேவையான சரிசெய்தலை மேற்கொண்டது.

**கிடைமட்ட பகிர்வு (மாநிலங்களுக்கு இடையே பகிர்வு):**

கிடைமட்ட பகிர்வைப் பொறுத்த மட்டில், மக்கள் தொகை செயல் திறனுக்கு 12.5 விழுக்காடு வெயிட்டேஜும், வருமானத்திற்கு 15 விழுக்காடும், மக்கள் தொகை மற்றும்

பரப்பளவு இரண்டிற்கும் தலா 15 விழுக்காடு, வனம் மற்றும் சுற்றுச் சூழலுக்கு 10 விழுக்காடு மற்றும் வரி மற்றும் நிதி முயற்சிகளுக்கு 2.5 விழுக்காடும் பகிர்ந்தளிக்க பரிந்துரைத்துள்ளது.

**மாநிலங்களுக்கு வருவாய் பற்றாக்குறை மானியம்:**

- வருவாய் பற்றாக்குறை மானியங்கள் மாநிலங்களின் வருவாய் கணக்குகளில் நிதி தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்ற தேவையிலிருந்து வெளிப்படுகின்றன. மாநிலங்கள் சொந்த வரி மற்றும் வரி அல்லாத வளங்கள் மற்றும் பகிர்வு ஆகியவற்றை பரிசீலித்த பிறகும் அந்த வருவாய் கணக்குகளை எதிர்கொள்ள வேண்டும்.
- வருவாய் பற்றாக்குறை என்பது வருவாய் அல்லது தற்போதைய செலவு மற்றும் வருவாய் ரசீதுகளுக்கு இடையிலான வேறுபாடு என வரையறுக்கப்படுகிறது. இதில் வரி மற்றும் வரி அல்லாதவை அடங்கும்.
- இது, அதிகாரப் பகிர்வுக்குப் பிந்தைய வருவாய் பற்றாக்குறை மானியங்கள் 26 உடன் முடிவடையும் ஐந்து ஆண்டு கால கட்டத்தில் 3 டிரில்லியன் ரூபாயாக இருக்க வேண்டும் என்று பரிந்துரைக்கிறது.
- வருவாய் பற்றாக்குறை மானியங்களுக்குத் தகுதி பெறும் மாநிலங்களின் எண்ணிக்கை வழங்கல் காலத்தின் முதல் ஆண்டான 22ஆம் நிதி ஆண்டில் 17 ஆக இருந்தது, வழங்கல் காலத்தில் கடைசி ஆண்டான 26ஆம் நிதி ஆண்டில் 6 ஆகக் குறைந்தது.
- மாநிலங்களுக்கு செயல்திறன் அடிப்படையிலான ஊக்கத் தொகை மற்றும் மானியங்கள்:
  இந்த மானியங்கள் நான்கு முக்கிய கருப்பொருட்களை மையமாகக் கொண்டு அமைந்துள்ளன.
  முதலாவது சமூகத் துறை. இதில் சுகாதாரம் மற்றும் கல்வியில் கவனம் செலுத்தப்படுகிறது.
  இரண்டாவது கிராமப்புற பொருளாதாரம். இதில் விவசாயம் மற்றும் கிராமப்புற சாலைகளை பராமரிப்பதில் கவனம் செலுத்தப்படுகிறது.

  நாட்டின் மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கையும், மொத்த தொழிலாளர்களில் 70 விழுக்காட்டையும், தேசிய வருமானத்தில் 46 விழுக்காட்டையும் கொண்டுள்ளதால், கிராமப்புற பொருளாதாரம் நாட்டில் குறிப்பிடத்தக்க பங்கை ஆற்றுகிறது.

- மூன்றாவது, நிர்வாகம் மற்றும் நிர்வாக சீர்திருத்தங்கள். இவற்றின்கீழ் நீதித்துறை, புள்ளியியல் மற்றும் விருப்பார்ந்த மாவட்டங்கள் மற்றும் வட்டாரங்களைக் கொண்டு வருவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
- நான்காவதாக, இது மின்சாரத் துறைக்கு செயல்திறன் அடிப்படையிலான ஊக்க முறையை உருவாக்கியுள்ளது. இது மானியங்களுடன் இணைக்கப்படவில்லை, ஆனால் மாநிலங்களுக்கு ஒரு முக்கியமான, கூடுதல் கடன் வாய்ப்பை வழங்குகிறது.

**ஒன்றிய அரசிற்கான நிதி இடம்:**

- 15வது நிதி ஆணையத்தின் மொத்த இடமாற்றங்கள் (அதிகாரப் பகிர்வு மற்றும் மானியங்கள்), ஒன்றிய அரசுக்கு கிடைக்கும் மொத்த மதிப்பிடப்பட்ட வருவாய் வரவுகளில் சுமார் 34 விழுக்காடு ஆகும். இதன்மூலம் தன்னுடைய வளத் தேவைகளைப் பூர்த்தி செய்ய போதுமான நிதி இடமும், தேசிய வளர்ச்சி முன்னுரிமைகளில் கடமைகளைச் செலவழிக்கவும் வழி கிடைக்கும்.

**உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்கள்:**

- நகராட்சி சேவைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்களுடன், புதிய நகரங்களைக் கட்டமைப்பதற்கு செயல்திறன் அடிப்படையிலான மானியங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான சுகாதார மானியங்களும் இதில் அடங்கும்.

- நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்களைப் பொறுத்த மட்டில், ஒரு மில்லியனுக்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட மாநகரங்கள் / நகரங்களுக்கு மட்டுமே அடிப்படை மானியங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட மாநகரங்களைப் பொறுத்த மட்டில், 100 விழுக்காடு மானியங்கள் மில்லியன் பிளஸ் மாநகரங்கள் சவால் நிதி (Million-Plus Cities Challenge Fund) மூலமாக செயல்திறனுடன் இணைக்கப்பட்டுள்ளன.

இந்த நகரங்களின் காற்றின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் நகர்ப்புற குடிநீர் வழங்கல், சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை ஆகியவற்றுக்கான சேவை நிலை அளவு கோல்களைப் பூர்த்தி செய்வதன் அடிப்படையிலேயே இந்த எம்சிஎப் (MCF) தொகை அமையும்.

**விமர்சனம்**

- செயல்திறன் அடிப்படையிலான ஊக்கத் தொகையை வழங்குதல், சுதந்திரமாக முடிவெடுப்பதைத் தடுக்கிறது. மாநிலத்தின் கடன் வாங்கும் திறன் பற்றிய எந்த ஒரு நிபந்தனையும், அந்த மாநிலத்தின் செலவழிக்கும் திறனை, குறிப்பாக வளர்ச்சியை கடுமையாகப் பாதிக்கும். இவ்வாறாக, கூட்டுறவு நிதி கூட்டாட்சியைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது.
- இது தனது சொந்த நிதி விவேகத்திற்கு மத்திய அரசை பொறுப்பேற்கச் செய்யாது, அத்துடன் ஒன்றியம் மற்றும் மாநில அரசுகளின் கூட்டுப் பொறுப்பை நீர்த்துப் போகச் செய்கிறது.

## 25. Asset Reconstruction Company / BAD Bank
**சொத்து புனரமைப்பு நிறுவனம் / BAD வங்கி**

## 26. India Energy Outlook 2021
**இந்திய எரிசக்தி அறிக்கை 2021**

**இந்தியா ஆற்றல் அவுட்லுக் 2021**

முக்கிய அம்சங்கள்

- **2030ஆம் ஆண்டு வாக்கில் மூன்றாவது மிகப்பெரிய ஆற்றல் நுகர்வோராக இந்தியா விளங்கும்:**

  - அடுத்த இரண்டு தசாப்தங்களில் ஆற்றல் தேவை வளர்ச்சியின் மிகப்பெரிய

பங்கை 25 விழுக்காடு என்ற அளவில் இந்தியா நிறைவு செய்யும். ஏனெனில், இது 2030 வாக்கில் ஐரோப்பிய யூனியனை முந்திச் சென்று உலகின் மூன்றாவது பெரிய ஆற்றல் நுகர்வோராக விளங்கும்.

தற்போதைய நிலையில், சீனா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியனுக்கு அடுத்தபடியாக, உலக அளவில் நான்காவது இடத்தில் ஆற்றல் நுகர்வோராக இந்தியா உள்ளது.

- தற்போதைய தேசிய கொள்கை பின்னணியில், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2040 வாக்கில் 8.6 டிரில்லியன் அமெரிக்க டாலராக விரிவடையும் என்பதால், இந்தியாவின் எரிசக்தி நுகர்வு கிட்டத்தட்ட இரட்டிப்பாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- **உலகளாவிய** பெருந்தொற்றுக்கு முன்பாக, இந்தியாவின் ஆற்றல் தேவை 2019 மற்றும் 2030க்கு இடையில் கிட்டத்தட்ட 50 விழுக்காடு அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டது. ஆனால் இந்த காலகட்டத்தில் வளர்ச்சி இப்போது 35 விழுக்காட்டிற்கு அருகில் உள்ளது.

- **<u>தொழில்மயமாக்கல் ஒரு முக்கிய உந்து சக்தி</u>:**

  - கடந்த மூன்று தசாப்தங்களில். தொழில்துறை மதிப்பு கூட்டப்பட்ட (வாங்கும் திறன் சமநிலை அடிப்படையில்) உலக வளர்ச்சியில் இந்தியாவின் பங்களிப்பு சுமார் 10 விழுக்காடு ஆகும்.
  - **2040 வாக்கில்,** தொழில்துறை மதிப்பு கூட்டப்பட்ட உலகளாவிய வளர்ச்சியில் இந்தியாவின் பங்களிப்பு கிட்டத்தட்ட 20 விழுக்காடு ஆக இருக்கும். மேலும், தொழில்துறை இறுதி ஆற்றல் நுகர்வில், குறிப்பாக எ்.கு தயாரிப்பில் உலகளாவிய வளர்ச்சிக்கு முக்கிய பங்களிக்கும்.

- **<u>இறக்குமதிகளின்மீதான நம்பகத்தன்மை</u>:**

  - பெட்ரோலிய ஆய்வு மற்றும் உற்பத்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை ஊக்குவிப்பதற்கான அரசின் கொள்கைகள் இருந்தபோதிலும், இந்தியாவின் உள்நாட்டு எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தி பல ஆண்டுகளாக தேக்க நிலையில்இருப்பதால், இந்தியாவின் பெருகி வரும் ஆற்றல் தேவைகள் புதைபடிவ எரிபொருள் இறக்குமதியையே நம்பியிருககும்.
  - அதிகரித்து வரும் எண்ணெய் தேவை காரணமாக, இந்தியாவின் எண்ணெய் இறக்குமதி விலையானது 2019 உடன் ஒப்பிடும்போது, 2030 வாக்கில் இரண்டு மடங்காகி 181 பில்லியன் அமெரிக்க டாலராக இருக்கலாம், அதே போல 2040 வாக்கில் இது மும்மடங்கு உயர்ந்து 255 பில்லியன் அமெரிக்க டாலராக அதிகரிக்கலாம்.

**<u>எண்ணெய் தேவை</u>:**

- தற்போதுள்ள கொள்கைகள் சூழ்நிலையில் 2040க்குள் இந்தியாவின் ஒரு நாளைய எண்ணெய் தேவையானது 74 விழுக்காடு அதிகரித்து 8.7 மில்லியன் பீப்பாய்களாக காணப்படுகிறது.

- தனிநபர் கார் உரிமையாளர்களின் எண்ணிக்கை ஐந்து மடங்கு அதிகரிப்பு காரணமாக, உலக அளவில் எண்ணெய் தேவை அதிகரிப்புக்கு இந்தியா காரணமாக அமையும்.
- எண்ணெய் இறக்குமதியில் இந்தியாவின் நிகரச் சார்பு – கச்சா எண்ணெய் இறக்குமதி மற்றும் எண்ணெய் பொருட்களின் ஏற்றுமதி ஆகிய இரண்டையும் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்க்கும்போது, உற்பத்தியை விட உள்நாட்டு நுகர்வு அதிகமாக உயரும் என்பதால், நிகரச் சார்பின் தற்போதைய 75 விழுக்காட்டிலிருந்து 2040 வாக்கில் 90 விழுக்காட்டிற்கும் அதிகமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**எரிவாயு தேவை:**

- இந்தியாவின் எரிவாயு தேவை 2040 வாக்கில் மும்மடங்காக அதிகரிக்கும் என்பதால், இயற்கை எரிவாயு வேகமாக வளர்ந்து வரும் சந்தையாக இந்தியா மாறும்.
- இயற்கை எரிவாயு இறக்குமதி சார்பு 2010இல் 20 விழுக்காடாக இருந்தது, 2019இல் கிட்டத்தட்ட 50 விழுக்காடு அதிகரிக்கும், இது 2040ல் 60 விழுக்காட்டிற்கும் அதிகமாக வளர வாய்ப்பு உள்ளது.

**நிலக்கரி தேவை:**

- **இந்தியாவின் மின்சாரத் துறையில் நிலக்கரி தற்போது ஆதிக்கம்** செலுத்தி வருகிறது. இது மொத்த உற்பத்தியில் 70 விழுக்காட்டிற்கும் அதிகமாக உள்ளது.
- **இந்தியாவின்** நிலக்கரி தேவையானது தற்போதைய 590ல் இருந்து 2040 வாக்கில் 772 மில்லியன் டன்னாக உயர்ந்து காணப்படுகிறது.

**புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களுக்கான தேவை:**

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளர்ச்சியில் இந்தியாவின் பங்களிப்பு, சீனாவுக்கு அடுத்ததாக, உலகின் இரண்டாவது பெரியதாக உள்ளது.

## 27. NITI Aayog's Strategy of Flood Management
**வெள்ள மேலாண்மை குறித்த நிதி ஆயோக்கின் அறிக்கை**

நிதி ஆயோக்கின் திரவ மேலாண்மை திட்டம்

கட்டமைப்பு அல்லாத நடவடிக்கைகளுக்கு வெள்ள மேலாண்மைக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்: அறிக்கை

நிதி ஆயோக் அறிக்கை வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் மேலாண்மைக்கான பயனுள்ள மற்றும் நீண்டகால உத்திகளை நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாட்டுடன் கட்டமைப்பு மற்றும் கட்டமைப்பு அல்லாத நடவடிக்கைகளை உள்ளடக்கியது.

 PH: 044-24339436, 42867555, 9840226187

வெள்ளம் முன்னறிவிப்பு, வெள்ள சமவெளி மண்டலம், வெள்ளப்பெருக்கை சரிசெய்தல் போன்ற குறைந்த செலவில் கட்டமைப்பு அல்லாத நடவடிக்கைகளை பெரும்பாலான இடங்களில் அதிக அளவு நீர் தேங்குவதற்கு ஏற்றவாறு இந்த அறிக்கை வலியுறுத்துகிறது.

முழு நாடு மற்றும் நதி மேலாண்மை செயல்பாடுகள் மற்றும் எல்லைப் பகுதிகள் தொடர்பான பணிகள் (2021-26) வெள்ள மேலாண்மை பணிகளுக்கான மூலோபாயத்தை உருவாக்கிய குழுவின் அறிக்கை மேலும் கூறுகிறது ஏரிகள் மற்றும் சோதனை அணைகள்.

நிதி ஆயோக் துணைத் தலைவர் ராஜீவ் குமார் தலைமையிலான குழு, இந்தியாவுக்கான தேசிய நீர் மாதிரியை சில அளவிடக்கூடிய மாதிரிகளின் உதவியுடன் உருவாக்க முடியும்.

வெள்ளத்தை தணிக்க கட்டமைப்பு அல்லாத நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்க குழு கருதுகிறது மற்றும் நீண்டகால மற்றும் நடுத்தர கால கட்டமைப்பு நடவடிக்கைகளுக்கு அவை எப்போது தவிர்க்கப்பட வேண்டும்.

"பெரும்பாலான இடங்களில், வெள்ளம் முன்னறிவிப்பு, வெள்ள சமவெளி மண்டலம், வெள்ளம் சரிசெய்தல் போன்ற குறைந்த விலையுயர்ந்த கட்டமைப்பு அல்லாத நடவடிக்கைகள் அதிக நீர்நிலைகளுக்கு இடமளிக்க வேண்டும்" என்று அறிக்கை கூறுகிறது.

செயற்கை நுண்ணறிவு, செயற்கைக்கோள்கள், ரிமோட் சென்சிங் மற்றும் வெள்ள முன்னறிவிப்பு மற்றும் எச்சரிக்கை அமைப்புகளுக்கான ஜிஐஎஸ் போன்ற மேம்பட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதையும் இது வலியுறுத்தியது.

"வெள்ள மேலாண்மை மற்றும் எல்லைப் பகுதித் திட்டத்தை (FMBAP) 2021-26 காலத்திற்கு நீட்டிக்கவும், திட்டத்தின் கீழ் நிதியுதவிக்கான புதிய திட்டங்களைச் சேர்க்க 15 வது நிதி

ஆணையத்தின் காலத்துடன் இணைக்கவும் குழு பரிந்துரைத்துள்ளது. "அறிக்கை கூறியது.

அறிக்கையின்படி, வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்களை மதிப்பீடு செய்வதற்கான பண வரம்புகளில் திருத்தங்கள் போன்ற சில மாற்றங்கள் வெற்றிகரமாக செயல்படுத்த திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

"வெள்ளத்தின் போது மற்றும் அதற்குப் பிறகு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கு உதவக்கூடிய வெள்ள மேலாண்மைத் திட்டங்களை உருவாக்கவும் இந்தக் குழு பரிந்துரைத்துள்ளது."

கேரள வெள்ளம் போன்ற துயரங்கள் மீண்டும் நிகழாமல் இருக்க, தற்போதுள்ள அணைகளில் வெள்ளப் பெருக்கத்தை வழங்குவதற்கான கொள்கையை அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

ரயில்வே கோடுகள், தேசிய நெடுஞ்சாலைகள், மதிப்புமிக்க சொத்துக்கள் அல்லது சர்வதேச எல்லைகளுக்கு பாதுகாப்பை வழங்குவதற்காக நடுத்தர கால நடவடிக்கைகளாக அணைக்கட்டுகள்/மதகுகளை நிர்மாணிப்பது எடுக்கப்பட வேண்டும் என்றும் அது சுட்டிக்காட்டியது.

